வாடிக்கையாளர்கள்
மற்றும் அனைவருக்கும்
இனிய
பொங்கல் வாழ்த்துக்கள்
உரித்தாகுக.

மற்றும் சகல விதமான
பட்டுப் புடைவைகளுக்கும்

ராசி சில்க்ஸ்

70, 71A, நவீன சந்தை,
(உட்புறம்) யாழ்ப்பாணம்.

பக்கங்கள்: ஆறு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 5-00

மங்கள வைபவங்களுக்கு
ஏற்ப பட்டுப் புடைவைகள்
மற்றும் சகல விதமான
ரெடிமேற் வகைகளுக்கு

ராசி சில்க்ஸ்

சுடர்:9 திருவள்ளுவர் ஆண்டு 2025 தை 01 வெள்ளிக்கிழமை (14– 01 – 1994) UTHAYAN A Lively National Tamil Daily கதிர் 49

# போர்க் கைதிகளை விடுவிப்பதில் புதிய இராணுவத் தளபதி அக்கறை

## முயற்சிகள் நடப்பதாக தகவல்

கொழும்பு, ஜனவரி 14

விடுதலைப் புலிகளிடம் சிக்கியுள்ள போர்க் கைதிகளை விடுவிப்பதில் புதிய இராணுவத் தளபதி லெப். ஜெனரல் ஜெரி டி சில்வா மிகுந்த அக்கறை கொண்டுள்ளார்.

போர்க் கைதிகளாக உள்ள பொலீஸாரையும் படையினரையும் விடுவிக்க அனைத்து முயற்சிகளும் மேற்கொள்ளப்பட்டு வருவதாக அவரே தெரிவித்திருக்கிறார்.

இப்போர்க் கைதிகள் பற்றிய மேலதிக விவரங்கள் சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம் ஊடாகக் கோரப்பட்டுள்ளன என்றும் அவர் தெரிவித்தார்.

கொழும்புப் பத்திரிகையாளர்களுக்கு அண்மையில் பேட்டி அளித்தபோதே அவர் இப்படிக் கூறினார்.

அவர் அங்கு குறிப்பிட்ட ஏனைய முக்கிய அம்சங்கள் வருமாறு:

★ இந்த ஆண்டில் இராணுவத்தின் முழுப் பலமும் ஒரு லட்சமாக அதிகரிக்கப்படும்.

★ இராணுவத்துக்குப் புதிதாக ஆட்சேர்ப்பது கட்டம் கட்டமாக இடம்பெறும்.

★ புதிய படையினருக்கு 14 வாரகாலப் பயிறசி அளிக்கப்படும். (உ–எ)

## 2 ஆயிரம் தொன் மா கோமாரியில் வருகிறது

யாழ்ப்பாணம், ஜன. 14

தற்சமயம் கொழும்பில் பொருள்கள் ஏற்றிக்கொண்டிருக்கும் 'கோமாரி' கப்பலில் இரண்டாயிரம் மெற்றிக் தொன் மா எடுத்து வரப்படவிருப்பதாக யாழ் செயலகத்துக்கு தகவல் கிடைத்துள்ளது.

யாழ். மாவட்டத்துக்கு தேவையான மாவை திருகோணமலை பிரிமா ஆலையில் இருந்து பெற முயற்சி எடுக்கப்பட்டது என்றும்—

பிரிமா ஆலையில் போதிய அளவு மா கையிருப்பில் இல்லாததால் கொழும்பில் தற்

(6ஆம் பக்கம் பார்க்க)

## நாளை மட்டும் இல்லை

பொங்கல் தினமான இன்று உதயன் பணியாளர்களுக்கு விடுமுறை நாளாகும். அதனால் நாளை சனிக்கிழமை (15-1-94) மட்டும் உதயன் உங்களுக்குக் கிடைக்கமாட்டான்.

நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை (16-1-94) வழமைபோல் உதயன் வெளிவருவான்.

## பொங்கலோ, பொங்கல்!



பொங்கலோ, பொங்கல்! பானையில் பால் பொங்கி வருகுதம்மா!
இங்கே பானையில் பால் பொங்குவது போல —
தமிழர் நெஞ்சங்கள் பொங்கிப் பொலியும் வண்ணம் —
அவர் தம் வாழ்வில் இன்னல்கள் நீங்கி —
சுதந்திரம் விரைவில் கிடைக்க வேண்டும் என்று விழைகின்றோம் —
வாசகர்கள், விளம்பரதாரர்கள், செய்தியாளர்கள், விநியோகஸ்தர்கள்,
எழுத்தாளர்கள், ஆதரவாளர்கள், அபிமானிகள் அனைவருக்கும் உதயனின்
இதயம் நிறைந்த பொங்கல் வாழ்த்துக்கள் உரியனவாகுக.

## ஆயர் கென்னத் விமானத்தில் பெப். 4 இல் யாழ். விஜயம்

யாழ்ப்பாணம், ஜன. 14

அங்கிலிக்கன் ஆயர் அதி. வண. கென்னத் பெர்னாண்டோ தமது துணைவியாருடன் அடுத்த மாதம் 4 ஆம் திகதியாழ்ப்பாணம் விஜயம் செய்யவிருப்பதாக கொழும்பில் இருந்து தகவல் கிடைத்துள்ளது.

அடுத்த மாதம் 7 ஆம் திகதி இங்கு அவர் வரவிருப்பதாக முன்னர் தகவல் கிடைத்திருந்தது.

கிளிநொச்சிக்கு அடுத்த மாதம் முதலாம் திகதி வந்து சேரும் ஆயர் அங்கு தமது விஜயத்தை முடித்துக் கொண்டு அநுராதபுரம் செல்வார்.

அங்கிருந்து விமான மூலம் பலாலிக்கு வந்து சேரும் ஆயர் கப்பல் மூலம் பருத்தித்துறையை வந்தடைவார்.

இங்கு பெப்ரவரி 14 ஆம் திகதி வரை ஆயர் தங்கியிருப்பார்.

கடந்த வருடம் ஜனவரி மாதத்தில் ஆயர் கென்னத் தடைசெய்யப்பட்ட கிளாலிப் பிரதேசம் ஊடாக யாழ். விஜயம் செய்ததும்—

அப்போது தமிழீழத் தேசியத் தலைவர் திரு. பிரபாகரனை அவர் சந்தித்து உரையாடியதும் தெரிந்தவையே. (உ-3)

## யுத்தத்தை முடிவுக்கு கொண்டுவர வேண்டும்

### கத்தோலிக்க பேராயர் அறிக்கை

யாழ்ப்பாணம், ஜன. 14

வடக்கு- கிழக்கு பகுதிகளில் நடைபெற்றுவரும் மனிதாபிமானமற்ற போர் முடிவுக்குக் கொண்டுவரப்பட வேண்டும்.

கத்தோலிக்க ஆயர்களின் சார்பில் இலங்கை கத்தோலிக்க ஆயர் மன்றத் தலைவரும் கொழும்பு பேராயருமான அதி. வண நிக்கலஸ் மார்க்கஸ் பெர்னான்டோ வெளியிட்டுள்ள அறிக்கை ஒன்றில் முன் கண்டவாறு தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

வத்திக்கான் வானொலியில் அவரது அந்த அறிக்கை நேற்று வெளியானது. அதில் மேலும் அவர் தெரிவித்திருப்பதாவது:–

அமைதியைக் கொண்டுவரும் பணி தங்களைச் சார்ந்துள்ளது என்பதைப் பொது மக்கள் உணர்ந்து போரை

(5 ஆம் பக்கம் பார்க்க)

## சூரியகந்த மனிதப் புதைகுழி

## மூடி மறைக்க முயற்சி என சிறிமாவோ குற்றச்சாட்டு

கொழும்பு, ஜன. 14

சூரியகந்த மனித புதைகுழி விவகாரத்தை மூடி மறைக்கும் முயற்சியில் அரச மற்றும் பொலிஸ் அதிகாரிகள் சிலர் ஈடுபட்டுள்ளனர்.

இப்படி எதிர்க்கட்சித் தலைவர் சிறிமாவோ பண்டாரநாயக்கா குற்றஞ்சாட்டி உள்ளார்.

இம் முயற்சிக்கு அரசின் ஆதரவைப் பெறும் உத்தியோகப்பற்றற்ற குழு ஒன்றும் இணைந்து செயல்படுவதாகவும் பத்திரிகைகளுக்கு நேற்று விடுத்த அறிக்கை ஒன்றில் அவர் தெரிவித்துள்ளார்.

சட்டத்தரணி எஸ்.ஏ. பிரேமரத்தினாவைக் கொலை செய்ய எடுத்த முயற்சி சூரியகந்த சம்பவத்தை மூடி மறைப்பதற்கு எடுக்கப்பட்டதென்பது தெளிவாகியுள்ளதாகவும் அவர் தெரிவித்திருக்கிறார்.

இடுகாடுகளில் இருந்து எடுக்கப்பட்ட எலும்புக் கூடுகள் சூரியகந்த புதைகுழிகளில் போடப்பட்டது அப்பகுதியில்

( 5ஆம் பக்கம் பார்க்க)

## வடக்கே புறப்பட்ட 'றுகுணு' திருப்பி அழைக்கப்பட்டது

யாழ்ப்பாணம், ஜன. 14

நேற்று முன்தினம் கொழும்பில் இருந்து வடக்கு நோக்கிப் புறப்பட்ட 'றுகுணு' கப்பல் இடைவழியில் கடற்படையினரால் கொழும்புக்கு திருப்பி அழைக்கப்பட்டதாக யாழ். செயலகத்துக்குத் தகவல் கிடைத்துள்ளது.

யாழ். மாவட்ட விவசாயிகளுக்கு தேவையான உரம் மற்றும் யாழ். செயலக திருத்த வேலைகளுக்கான கட்டடப் பொருள்கள் ஆகியவற்றுடன் இக்கப்பல் நேற்று முன்தினம் வடக்கு நோக்கிப் புறப்பட்டதாகவும் —

இக்கப்பலை மீண்டும் கொழும்புத் துறைமுகத்துக்கு கொண்டுவருமாறு கடற்படையினர் விடுத்த அறிவிப்பை அடுத்து கப்பல் மீண்டும் கொழும்பு திரும்பியதாகவும் — யாழ். செயலகத்துக்கு நேற்றுக் கிடைத்த தகவல் தெரிவித்தது.

இதேவேளை —

இக்கப்பல் வடக்கு நோக்கி நேற்றிரவு புறப்பட ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்ததாக செஞ்சிலுவைச்சங்க சர்வதேசக்குழு யாழ். அலுவலக அதிகாரி நேற்று மாலை தெரிவித்தார். (உ-3)

## பேராசிரியர் துரைராஜா மார்ச்சில் பதவி விலகுகிறார்

யாழ்.பல்கலைக்கழக துணை வேந்தர் போராசிரியர் அ. துரைராஜா எதிர் வரும் மார்ச் மாத இறுதியுடன் தமது பதவியிலிருந்து விலகுகிறார்.

கடந்த ஐந்து வருடங்களாக யாழ் பல்கலைக்கழக உபவேந்தராகப் பணியாற்றி வரும் பேரா.சிரியர் துரைராஜாவின் சேவைக்காலம் எதிர் வரும் ஆகஸ்ட் மாதத்தில் முடிவடையவிருக்கின்றது.

எனினும் சுகவீனம் காரணமாக தாம் மார்ச் மாதத்துடன் பதவி விலகுவதாக ஜனாதிபதிக்கும், பல்கலைக்கழக மானிய ஆணைக்குழுவின் தலைவருக்கும் அவர் கடிதம் எழுதியுள்ளார்

மார்ச் மாதத்துக்குப் பின்னர் பேராசிரியர் துரைராஜா கொழும்பு திறந்த பல்கலைக்கழகத்தில் தொடர்ந்து பணியாற்றுவார் எனத்தெரியவருகிறது. (உ-3)

# வடமராட்சிக் கரையோரம் அகோர பீரங்கித் தாக்கு!

## அதிர்ச்சியால் வயோதிபர் மரணம் – இருவர் காயம்

வடமராட்சி, ஜன. 14

வடமராட்சி, வடக்கு மற்றும் கிழக்கு கரையோரப் பகுதிகள் மீது நேற்று அதிகாலை கடற்படையினர் அகோர பீரங்கித் தாக்குதல்களை நடத்தினர்.

பொழுது புலரும் வேளை மேற்கொள்ளப்பட்ட இத்தாக்குதலால் கரையோரப் பகுதிகள் அதிர்ந்தன. மக்கள் பெரும் பதற்றமடைந்து பாதுகாப்பான இடங்களை நோக்கி இடம்பெயர்ந்தனர்.

வடமராட்சி கடற்பரப்பில் காணப்பட்ட கடற்படைக் கப்பலில் இருந்தும் — அதற்கு உதவியாக வந்த கடற்படைப் படகுகளில் இருந்துமே இத்தாக்குதல் மேற்கொள்ளப்பட்டது.

தாக்குதலினால் வயோதிபர் ஒருவர் அதிர்ச்சியால் உயிரிழந்தார். இருவர் படுகாயமடைந்தனர். கரையோரப் பகுதி குடியிருப்புக்கள் பலத்த சேதமடைந்தன. கடற்றொழில் உபகரணங்களும் நாசமாகின.

கட்டைக்காடுப் பகுதியில் இருந்து புறப்பட்ட பாரிய கடற்படைக் கப்பலும் —இரு 'டோறா' படகுகளும் பருத்தித்துறை கடற்பகுதியை கடந்து சென்ற சமயம் தாக்குதலை நடத்தத் தொடங்கின. காலை 6 மணி முதல் 6.45 மணி வரை தாக்குதல் நடத்தப்பட்டது.

பருத்தித்துறை, இன்பருட்டி சக்கோட்டை, திக்கம், பொலிகண்டி, வல்வெட்டித்துறை மயிலியதனை, தொண்டமானாறு பகுதிகளை உள்ளடக்கிய கடற்பகுதிகளிலும் கரையோர குடியிருப்புக்கள் மீதும் பீரங்கிக் குண்டுகள் [illegible] வெடித்தன.

(6ஆம் பக்கம் பார்க்க)

## பொம்மரினால் நகரில் பதற்றம்

யாழ்ப்பாணம், ஜன. 14

நேற்றுக் காலை 11 மணியளவில் பொம்மர் ஒன்று யாழ். நகரப் பகுதியை வட்டமிட்டது. பொங்கலுக்குப் பொருள்களை வாங்குவதில் சுறுசுறுப்பாக ஈடுபட்டிருந்த மக்கள் இதனால் பதற்றம் அடைந்தனர். (இ-162-17-51-15)

## தூதுவராக சிசில் மாத இறுதியில் பதவி ஏற்பார்

கொழும்பு, ஜன.14

முன்னாள் இராணுவத் தளபதி சிசில் வைத்தியரத்னா இம் மாதக் கடைசியில் அல்லது அடுத்த மாத நடுப் பகுதியில் தாய்லாந்துக்கான இலங்கைத் தூதராகப் பதவி ஏற்கவிருக்கிறார்.

வெளியுறவு அமைச்சு வட்டாரங்கள் இத்தகவலை வெளியிட்டன. (ஒ-எ)

## முச்சந்தி முரளி



கைதிகளை விடுவித்து விட்டால் தங்களின்ர பிரச்சினை தீர்ந்து விடும் என்று நினைக்கினம் போல......!

## பண்ணைக் கடலில் படையினர் சூடு!

### மீனவர் ஒருவர் காயம்

பண்ணைக்கடலில் மீன் பிடித்துக் கொண்டிருந்த மீனவர் ஒருவர் படையினரின் துப்பாக்கிப் பிரயோகத்தில் காயம் அடைந்தார்.

நேற்று அதிகாலை 2.30 மணி அளவில் இச்சம்பவம் நிகழ்ந்தது.

ஆனைக்கோட்டை சாவற்கட்டைச் சேர்ந்த இராசலிங்கம் நவநீதன் (வயது 20) என்பவரே காயம் அடைந்தவர் ஆவார்.

இவரது 5 ஆயிரம் ரூபா பெறுமதியான வலையும் கடலில் கைவிடப்பட்டது.

காயம் அடைந்தவரும், அவரது சகோதரரும், மற்றும் ஒருவருமாக மூவர் வள்ளம் ஒன்றில் மண்கும் பான் பக்கமாக மீன் பிடித்துக் கொண்டிருந்த சமயம் இத்தாக்குதல் சம்பவம் இடம் பெற்றது. (இ- 15)

## வடக்கில் மீண்டும் மழை?

இலங்கையின் தென்கிழக்குக் கரையோரப் பகுதியில் தாழமுக்கம் தென்படுவதாக வளிமண்டலவியல் திணைக்களம் அறிவித்துள்ளது.

இதனால் நாட்டின் வடக்கு, கிழக்கு, வடமத்திய மாகாணங்களில் பரவலாக மழை [illegible]—

[illegible] பகலில் பரவலான மழை அல்லது இடிமுழக்கத்துடன் கூடிய மழை பெய்யும்—

நாட்டின் கிழக்கு, தெற்கு, தென்கிழக்கு கரையோரத்துக்கு அப்பால் உள்ள கடல் கொந்தளிப்பாகக் காணப்படும். ஓரளவு மழைபெய்யும். இடையிடையே காற்று [illegible]—

—இவ்வாறு மேலும் அறிவிக்கப்பட்டது. (உ–எ)

இன்று
ஈராண்டைப் பூர்த்தி செய்யும்
தமிழ்மதி நகைமாடம்

வாடிக்கையாளர்களுக்கு மகிழ்வுடன் வழங்கும்
புத்தாண்டு - பொங்கல்
வாழ்த்துக்கள்

நயம், நாணயம், நம்பிக்கை உத்தரவாதத்துடன்
நவீன வடிவமைப்புடன் நகைகளை
நாள்தோறும் அறிமுகப்படுத்துவார்

தமிழ்மதி நகைமாடம்
82/6, கஸ்தூரியார் வீதி
யாழ்ப்பாணம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ்சிறு விளம்பரம்

## விற்பனைக்கு

அலுமாரி, சோக்கேஸ், டிரெஸிங்ரேபிள், இரண்டு லாச்சி மேசை, ஒற்றை லாச்சி மேசை, ஸ்ரூல், கட்டில்கள், மெத்தைகள், விறாக்கிகள், கதவுகள் விற்பனைக்குண்டு. தொடர்பு: இல. 7, கைலாசபிள்ளையார் பின் வீதி, நல்லூர். (28931)

கறுப்பு, வெள்ளை நிறத்தில் யப்பனீஸ், ஸ்பிற்ஸ் நாய்க்குட்டிகள் ஒரு சோடி விற்பனைக்குண்டு. தொடர்பு: 887, ஆஸ்பத்திரி வீதி, சுண்டிக்குளி, யாழ்ப்பாணம். (6904)

## விற்பனையாகின்றது

O M O S English Grammar, A/L Past Papers 1993 சேர்ந்தது, விஞ்ஞானம் 9ஆம் ஆண்டு, ஆழ்கூற்று கேத்திர கணிதம், மீட்டல் கணிதம்-O/L ஆகியன விற்பனையாகின்றன. ஸ்ரீலங்கா புத்தகசாலை யாழ். (சி-7013)

## WANTED

I.B.M. P.C. or I.B M. Compatible Computer is wanted forSt.John's Church. Those who are interested Please contact the Vicar, St. Jhon's Church, Chundikuli. (28880)

## நாய்க்குட்டி விற்பனைக்கு

இரண்டரை மாதங்கள் நிறைவடைந்த, பூச்சி அகற்றிய பெண் அல்சேஷன் நாய்க்குட்டி விற்பனைக்குண்டு. தொடர்பு: முகுந்தன் வைத்தீஸ்வரன், மானிப்பாய் ஆண்கள் பாடசாலை முன், மானிப்பாய். (சி/7023)

## உடன் விற்பனை

புறொயிலர் குஞ்சுகள் வந்துள்ளன. ஓடர் செய்தவர்கள் வந்து பெற்றுக் கொள்ளவும். வளர்ந்த கைலையிற் பேட்டுக் குஞ்சுகளும் உண்டு. திருமகள் ஸ்ரோர்ஸ், 705, கே. கே. எஸ். வீதி, சிவலிங்கப் புளியடி, யாழ்ப்பாணம். (28928)

## தேவை

தனிப்பட்ட ரியூசன் வழங்குவதற்கு தங்களால் இயன்ற பாடங்களை கற்பிக்கக்கூடிய ஆசிரியர்கள் தேவை. காலை 9-00 — 10-00, மாலை 2-00—3-00ற்குள் நேரடியாகச் சந்திக்கவும்: ஆறுமுகநாதன், 10, கச்சேரி கிழக்கு ஒழுங்கை, வோகேந்திரா வீதி, சுண்டிக்குளி. (6903)

## மணப்பெண்கள் தேவை

செவ்வாய்க் குற்றமுள்ளவர்கள் 37 வயது J.T.O., 36 வயது எக்கவுண்டன்ற், 42 வயது அரசாங்க உத்தியோகத்தர், 28 வயது B. Com முடித்தவர், 30 வயது மெக்கானிக்கல் எஞ்ஜினியருக்கும் தேவை. மங்கள ஏஜென்சி, கொய்யாத்தோட்டம். (28889)

குற்றமற்ற, இந்து 29வயது சவுதியால் வந்தவருக்கும், 30 வயது M.B.B.S.க்கும், 40 வயது எலெக்றிக்கல் போர்மனுக்கும், 42 வயது பெரிய வர்த்தகருக்கும் தேவை. மங்கள ஏஜென்சி, கொய்யாத்தோட்டம். (28890)

## ENGINEERING DRAWING

முதலாம் வருட பொறியியல் பீட மாணவர்களுக்கான Engineering Drawing வகுப்பு 15-1-94 ஆரம்பமாகின்றது. 03, வைமன் வீதி, நல்லூர். (28894)

## கல்வி

O/Lலில் கட்டாய பாடமாகிய கணித பாடத்தினை 27 வருட அனுபவமுடைய ஆசிரியரினால் 40 மணித்தியாலங்களில் ஆரம்ப அறிவிலிருந்து Distinction பெறுபேறடையக் கற்பிக்கப்படும். Spoken English with Grammar உட்பட பாலர்வகுப்பிலிருந்து A/L வரை சகல பாடங்களும் கற்பிக்கப்படும். ஆறுமுகநாதன், 10, கச்சேரி கிழக்கு ஒழுங்கை, லோகேந்திரா வீதி, சுண்டிக்குளி. (6902)

## மணமக்கள் தேவை

கனடா, ஜேர்மனி வெளிநாட்டை விரும்பும் மணப்பெண்கள் தேவை. எம்மிடம் கிரகபாவம் 50க்கு மேற்பட்ட மணமக்கள் பலர் இருக்கிறார்கள். மங்கள ஏஜென்சி, கொய்யாத்தோட்டம் (28891)

## மணமக்கள் தேவையா?

எம்மிடம் உங்களுக்குத் தேவையான மணமக்கள் பலர் இருக்கிறார்கள். ஞாயிறு காலை சந்தித்துத் தேவைகளைப் பூர்த்தி செய்யுங்கள். மங்கள ஏஜென்சி, கொய்யாத்தோட்டம். (28888)

## காணவில்லை

11-01-94 மேய்ச்சலுக்காக சென்ற சிவப்பு நிற குட்டித் தாச்சி ஆட்டைக் காணவில்லை. தயவுசெய்து யாராவது பிடித்து இருந்தாலோ அல்லது விற்பனை செய்து வாங்கி இருந்தாலோ உடன் அறியத்தரவும். A. P. இராசரத்தினம், போதனாவைத்தியசாலை அல்லது 392/2, புகையிரதவிடுதி, யாழ்ப்பாணம் (28933)

## வெளிவந்துவிட்டது

ஆத்மஜோதி நா. முத்தையா அவர்களின் மீள்பார்வையுடன் கூடிய ஆண்டு 9 சைவநெறி வெளிவந்துவிட்டது ஆக்கம்: க. சந்திரசேகரம் வெளியீடு: சோதி புத்தகசாலை, கச்சாய் வீதி, (மக்கள் கடை அருகில்) சாவகச்சேரி. ஏக விநியோகஸ்தர்கள்; ஸ்ரீசுப்பிரமணிய புத்தகசாலை, இல. 235, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம். (சி-6905)

---

# MATHS CENTRE
**NELLIADY.**

## புதிய வகுப்புகள்
ஆரம்பமாகிவிட்டன

### ஆண்டு 5

கணிதம் — திரு. விமலன்
தமிழ் — திரு. மகாலிங்கசிவம்
(விசேட புலமைப்பரிசில் வகுப்பு)

### ஆண்டு 6, 7, 8, 9,
### ஆண்டு 10, 11

கணிதம் — திரு. விமலன்
விஞ்ஞானம் — திரு. வியபகுமார்
திரு. ஜெபரட்ணம்
தமிழ் — திரு. கதிர்காமசேகரம்
சமயம் — திருமதி மனோன்மணி
ஆங்கிலம் — திரு. பரஞ்சோதி
வர்த்தகம் — திரு. சிவலிங்கம்
சமூகவியல் — திரு. தவம்

- நல்லதையே செய்வோம் -

சி விமலன்
-நிர்வாகி-

(28917)

---

# VIBGYOR
(ACADEMY)
குளப்பிட்டி வீதி,
(மில் அருகில்)
ஆனைக்கோட்டை.

ஆண்டு 4 முதல் **O/L** வரை வகுப்புக்கள் ஆரம்பமாகிவிட்டன.

* யாழ் பிரபல ஆசிரியர்குழு

பிரத்தியேக **O/L** விஞ்ஞானம்
**J J. கொலின்ஸ்**
ஆரம்பம்: 17 — 01 — 1994
(மாலை 5 மணி)

ஆண்டு 4, 5 புலமைப் பரிசில் வகுப்பு
தமிழ்: **குழந்தைவேல்**
கணிதம்: **ஜெயகுமார்**
ஆரம்பம்; 15 — 01 — 1994

(28885)

---

# 9ஆம் ஆண்டு நினைவு நாள்



படைப்பு: 29 - 08 - 1937
பறிப்பு: 15 - 04 - 1985

## அமரர் அவுறாம்பிள்ளை ஜோண்பிள்ளை அருளப்பு

ஒன்பதாண்டுகள் ஓடி மறைந்தாலும்
உங்கள் நினைவுகள் நெஞ்சங்களில்
நீக்கமற நிறைந்திருக்கும்.

இவரின் ஆன்ம ஈடேற்ற திருப்பலிகள் நாளை (15-01-1994) சனிக்கிழமை யாழ் புனித மரியன்னை பேராலயத்தில் காலை 6 30 மணிக்கும், சோப்பாய் புனித மரியாள் ஆலயத்தில் மாலை 4 30 மணிக்கும் ஒப்புக்கொடுக்கப்படும். உறவினர், நண்பர்கள் திருப்பலிகளில் பங்கேற்று அன்னாரின் ஆன்ம ஈடேற்றத்திற்காக இறைஞ்சும்படி கேட்டுக்கொள்கின்றோம்.

பாசத்துடன் நினைவு கூரும்,
மனைவி,
மக்கள்: யோகா, அருள்
மருமகள், பேரகுழந்தைகள்

"யோகவாசம்"
குடியிருப்பு,
செட்டிகுளம்.

---

வாடிக்கையாளர்களுக்கு
"நன்னாள் இது நமது தைத்திருநாள்"
இப் பொன்னாளில்

# எமது நல்வாழ்த்துக்கள்

## ஸ்ரீ காந்தா அச்சகம்

ஸ்ரீலங்கா அச்சக அதிபரின் மேற்பார்வையில் நடைபெறுவதால்
அழகுமிகு அச்சக வேலைகளுக்கு நேரடியாக தொடர்பு கொள்ளுங்கள்

## ஸ்ரீலங்கா அச்சகம்
(ராஜா தியேட்டர் அருகில்)
ஸ்ரீகாந்தா அச்சக லேன்,
யாழ்ப்பாணம்

● எமக்கு வேறு கிளைகள் கிடையாது

[28897]

---

உ

# காஞ்சி மாமுனிவர் ஜகத்குரு
அவர்களின்
## நூற்றாண்டு இறைபணி நிறைவுதின
# பிரார்த்தனை உரை

இடம்: நல்லூர் சிவன் கோயில் மண்டபம்
காலம்: தைமாதம் 2ஆம் திகதி 15-01-1994 சனிக்கிழமை
நேரம்: காலை 8-00மணி பூஜா, ஜப ஹோம வழிபாடுகள். மாலை 2 - 30 மணி பிரார்த்தனை அஞ்சலி கவிதாஞ்சலி

பின்னர்
சல நிதி ப. கோபாலகிருஷ்ணன் தலைமையில் பல பேரறிஞர்கள் பிரார்த்தனாஞ்சலி உரை நிகழ்த்துவர்

★ அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம் ★

சிவானந்த குருகுலம்.
தர்மதாஸ்தா குருகுலம்,

யாழ்ப்பாணம்.
14-01.94

(28929)

---

# மணமகள் தேவை

யாழ். அந்தண வாலிபர், வயது 30, உயரம் 5 அடி 5அங். அமெரிக்கப் பிரஜா உரிமை பெற்றவர். கணக்கியல் பட்டதாரி, அமெரிக்காவில் அரசுத் துறையில் உத்தியோகம். அவருக்கு அதே குலத்தைச் சேர்ந்த படித்த, ஆங்கிலப் பயிற்சியுள்ள, அழகிய இனிமையான சுபாவமுள்ள பொருத்தமான மணமகளை தமையனார் தேடுகின்றார். பெண்ணின் ஜாதகம், சமீபத்தில் எடுத்த புகைப்படம், குடும்பப் பின்னணி முதலிய விவரங்களை முதற்கடிதத்திலேயே தருக. தகவல்கள் மிக அந்தரங்கமாக வைத்திருக்கப்படும். ஜாதகம், புகைப்படம் முதலியவை மிகக்கவனமாகத் திருப்பி ஒப்படைக்கப்படும். ஏனையவை நேரில் பேசித் தீர்க்கலாம்.

அனுப்பவேண்டிய முகவரி —
விளம்பரதாரர்,
இல. 590 மே/பா உதயன்,
நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.

[28912]

---

# மாபெரும் காட்சி உதைபந்தாட்ட போட்டி

அச்செழு சித்தி விநாயகர்
விளையாட்டுக் கழகம்

இன்று (14 - 01 - 1994) கழக மைதானத்தில் (பிற்பகல் 3-00) நடத்தவிருக்கும் மாபெரும் காட்சி உதைபந்தாட்டம்

மோதும் அணிகள்
சித்தி விநாயகர் எதிர் குமரன் வி. கழகம்
யங்கென்றீசியன் எதிர் ஸ்கந்தா
சென் அன்ரனீஸ் எதிர் றோயல்

பிரவேசம் ரூபா **5/-**

ரசிகர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றார்கள்

சித்தி விநாயகர் விளையாட்டுக் கழகத்தினர்.
அச்செழு.

[28932]

---

எமது இனிய பொங்கல் வாழ்த்துக்கள்

# "A" LEVEL CENTRE

1ஆம் ஒழுங்கை, பருத்தித்துறை வீதி,
யாழ்ப்பாணம்.

**93** ஆம் ஆண்டு பரீட்சைக்கு தோற்றிய மாணவர்களுக்கான

## PAPER CLASS

ஆரம்பம்: **15 — 01 — 1994** (Sat.)

★ Phy. — Mr. ஜெயசீலன் B. Sc. Sat. & Sun 4-15 p. m.
★ Che. — Mr. நாகரட்ணம் B. Sc. Sat. & Sun. 5-15 p. m.
★ Pure & App. — Mr. நித்தியானந்தன் B. Sc. Sat. & Sun. 8-30

(சி-7025)

---

# 31ஆம் நாள் நினைவஞ்சலி



தோற்றம்: 08 — 04 — 1922
மறைவு: 16 — 12 — 1993

அமரர்
## கணபதிப்பிள்ளை கயிலாயநாதர்
(B. A. Dip - in - Ed )

எம் கண்ணில் நீர் மல்கா திறுதிவரை காத்தாயே!
அங்கண்ண வருட்பாதத் தணிமலரு மானாயே!
இங்கெம்மைப்பிரிந்தாலும் யாம்மறவோ மென்நாளும்
செங்கண்ணீர்ப் பூக்கொண்டு சேவித்து வாழ்வோமே.

மனைவி, மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்

''சந்த கோட்டம்'',
வட்டுக்கோட்டை.

(28950)

---

# ஞாபகமூட்டல்

## பழைய மாணவர் சங்கம்
யாழ். இந்துக்கல்லூரி

**22-01-1994** — பழைய மாணவர்கள் தினம் சகல பழைய மாணவர்களுக்கும்
**23-01-1994** — வருடாந்தப் பொதுக்கூட்டம் சங்க உறுப்பினர்களுக்கு மட்டும்.

பாலசுப்பிரமணியம் தவபாலன்,
செயலர்.

ப. மா. ச.,
யா. இ. ச.
1994-01-13

[சி-6968]

---

வவுனியா
# இணைந்த பல்கலைக்கழகக் கல்லூரி மாணவர்களின் கவனத்திற்கு

மேற்படி மாணவர்களின் பயணத்திற்கான போக்குவரத்து ஒழுங்குகள் செய்யப்பட இருப்பதனால், அனைத்து மாணவர்களையும் 15-01-94 (சனிக்கிழமை) அன்று காலை 9-00 மணிக்கு நல்லூர் ஆலய முன்றிலில் ஒன்று கூடுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

பல்கலைக்கழகக் கல்லூரி
மாணவர் ஒன்றியம்.

(28922)

---

# 31ஆவது நீங்காத நினைவு நாள்

14 — 01 — 1994

## அமரர் முருகர் கந்தையா

தாய் மடியில்: **18 - 07 - 1920**
வான்பதியில்: **15 - 12 - 1993**

15-12-93 அன்று, மண்ணுலகு விட்டு, விண்ணுலகு சென்ற அமரர் மு கந்தையா அவர்களின் இறுதிக் கிரியைகளில் கலந்து, பற்பல உதவிகள் புரிந்த அன்பர்கள், நண்பர்கள், உற்றார், உறவினர், ஊரார் அனைவர்க்கும் எமது உளம் பூத்த நன்றியை நவில்வதுடன், இன்று 14-01-1994 நடைபெறவிருக்கும் 31ஆவது நினைவு நாள் வைபவத்தில் அனைவரையும் கலந்து கொள்ளுமாறும் அன்புடன் வேண்டுகிறோம்.

இல்லாள்: திருமதி சின்னாச்சி கந்தையா,
மகள்: திருமதி பாக்கியம் இரத்தினம்,
மகன்: க. திருநாவுக்கரசு (டென்மார்க்),
மகள்: திருமதி தனலட்சுமி செல்வநாயகம்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்,
பூட்டப்பிள்ளைகள்.

54/12, ஆத்திசூடி வீதி,
கந்தர்மடம்,
யாழ்ப்பாணம்.

(28854)

---

உ
வடலியடைப்பு
# புதறாவளை ஸ்ரீ சித்தி விநாயகர் ஆலய
# மகா சபை பொதுக்கூட்டம்

மேற்படி ஆலய மகாசபை பொதுக்கூட்டம் 1994 - 01 - 16ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை பி. ப. 2-00மணிக்கு ஆலய முன்றிலில் நடைபெறும். அங்கத்தவர்களை தவறாது சமூகம் தரும்படி அன்புடன் கேட்டுக் கொள்கிறோம். அழைப்பிதழ் கிடைக்கப் பெறாத அங்கத்தவர்கள் செயலாளருடன் தொடர்பு கொள்ளவும்.

திரு. சி. அப்புத்துரை.
தலைவர்.

மா. புலேந்திரன்,
சி சுகுமார்.
இணைச் செயலாளர்கள்.

[28896]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உதயன் பொங்கல் சிறப்பிதழ் - 1994

# தமிழரின் நன்றியுணர்வுப் பண்புக்கு அடையாளமாக விளங்கும் தைப்பொங்கல்

நன்றி மறப்பது நன்றன்று என்பது தமிழ் மறை. மக்களுக்கு நன்றி செய்யும் அனைத்துயிர்க்கும் நன்றி காட்ட வேண்டியது மானிடரின் தலையாய கடமை. தைப் பொங்கல் இவ்வுண்மையினை காட்டுகிறது. தோன்றாத் துணையாய் உதவி புரியும் இறைவனுக்கும் இறைவனருளால் உதவி புரியும் இந்திரன், சூரியன் முதலிய தேவர்களுக்கும், உழவர்களுக்கும் உதவும் காளை இனம் மற்றும் பசுக்களுக்கும் நாம் வழிபாடு செய்து நன்றியறிதலைப் புலப்படுத்திக் கொள்கிறோம். நாமனைவரும் நன்றி கூறும் மனப்பாங்குடன் செயலிலும் காட்டக் கூடிய பண்பை வளர்ப்பதற்கு இவ்விழா வழி காட்டுகிறது.

''ஒளி பொங்க, உயிர் பொங்க, உணர்வுகளும் பொங்க, காவியங்கள் பொங்க கமழ் பொங்கல் பெரும் பொங்கல் வந்ததடா தம்பி'' என்ற கவிஞனின் உணர்ச்சி வாசகங்களை உன்னிப்பாக நினைக்க வேண்டும்.

விழாக்களும், பண்டிகைகளும் எமது வாழ்வில் சிறந்த மகிழ்ச்சியை அளிக்க வல்லன. இவற்றின் மூலம் இன்பம் பெருகி இன்னலகன்று அமைதி ஒன்று ஏற்படுகிறது.

இவ்விழாவை தமிழ்நாட்டினர் மூன்று நாட்கள் கொண்டாடுவர். பொங்கலுக்கு முதல் நாள் போகிப்பண்டிகை, தைமாதப் பிறப்பில் பொங்கற் பண்டிகை. அடுத்த நாள் மாட்டுப் பொங்கல் ஆகிய மூன்று நிகழ்ச்சிகள் இவ் விழாவில் இணைகின்றன.

போகி என்பது இந்திரனைக் குறிக்கும் ஒரு சொல். வயலும் வயல் சார்ந்த இடமுமாகிய மருத நிலத்திற்கு அவனே தெய்வம். இந்திரனுக்கு விழா வெடுத்துப் போற்றிய சிறப்பை சிலப்பதிகாரத்தில் காண்கிறோம். இந்திரன் மழைக்குரிய தெய்வம். அவனருளால் மழை பொழியவும், உணவுப் பொருள் விளையவும், வழியுண்டாகிறது. இதனாலே போகிவிழா வெடுத்து இனிய உணவுகள் படைத்தும், அருந்தியும் மகிழ்வது வழக்கமாகிறது.

மகர சங்கிராந்தி நாள் தைமாதப் பிறப்பாகும். சூரியன் மகரராசியில் சஞ்சரிக்கும் மாதத்தின் முதல் நாள் இது. கதிரவனுக்குப் பொங்கலிட்டுப் படைத்து மகிழ்வது இந் நாளின் ஒழுங்காகும்'' அன்பும் பொங்குக, அருளும் பொங்குக, இன்பப் பொங்கல் என்றும் பொங்குக'' என்று எல்லோரும் ஆடிப்பாடி மகிழ்வதுண்டு.

மூன்றாவது நாள் மாட்டுப் பொங்கல் நாளாகும். மாடு என்னும் சொல்லுக்கு செல்வம் என்னும் பொருளும் உண்டு. ''கேடில் விழுச்செல்வம் கல்வி ஒருவருக்கு மாடல்ல மற்றையவை'' என்ற குறளால் அறியலாம். மாடுகள் நமக்கு செல்வத்தையும், செழிப்பையும் நல்குவன. விவசாயத்துக்கு உதவுவன. எனவே அவற்றுக்கு நன்றி பாராட்டும் விழாவாக இது அமைகிறது. மாடுகளை நீராட்டி, கொம்பில் வர்ணம் தீட்டி, மலர்மாலை சூட்டி, பொட்டிட்டு அழகு செய்து நல்லுணவை உண்ணவைத்து நிற்பதோடு மாட்டுப்பட்டியில் பொங்கல் செய்து படைத்து மகிழ்வார்கள். பண்ணை பார்க்கும் தொழிலாளிகளுக்குப் பரிசு வழங்கி மகிழ்வார்கள்.

ஆகவே நன்றிகூறலுக்கு ஒரு பெரும் விழாவாக மழையைத் தருவிக்கும் இந்திரனுக்கும், பயிரை விளைவிக்கும் பகலவனுக்கும், பண்ணைக்குதவும் மாடுகளுக்கும் பொங்கலும், பூசையும் செய்து போற்றுவதை நாம் என்றும் மறக்காது தொடர்ந்து செய்து பெருமையடைவோம்.

அன்பு,பாசம், இரக்கம் என்பவற்றால் இன்பமும், பகைமை, துவேஷம், பேராசை, பிறர்நலம் பேணாத சுயநலம் என்பன துன்பமும் உண்டாகக் காரணமானவை என்னும் உண்மைகளைப் பகுத்தறிவால் கண்டு இன்பத்துக்குக் காரணமான வழிகளில் முயற்சிப்பதும் துன்பத்துக்கு ஏதுவான வழிகளை விலக்குவதும் அவசியம் என்பதை சிந்திக்கும் ஒவ்வொரு தமிழ் மகனும் நம்முன்னோர் நன்றியுணர்வின் சின்னமாக நமக்கு அளித்த பெருஞ்செல்வமே பொங்கல் விழா என்பதனை உணர்வர்.

ஒரு மரத்திற்கு வேரிலே இடும் பசளையும், நீரும், பழத்தாலும், இலையாலும், கிழங்காலும் பயனாகக் கிடைப்பது போலச் சடப்பொருளான சூரியனுக்குச் செய்யும் வழிபாடு சூரிய இயக்கத்திற்கு ஆதாரமான பரம் பொருளால் ஏற்றருளப் படுவது பற்றிச் சிறிதும் சந்தேகப்படத் தேவையில்லை.

இவற்றை உணர்வதற்கு நமது கண்முன் நிகழும் உலகியல் நடைமுறைகளும் நம் வாழ்விலேயே உண்டாகும் அனுபவங்களுமே போதும். நாம் காணும் உலகில் நம் வாழ்வில் நன்மை, தீமை என்பன உண்டாவதற்கு மூன்று வழிகள் உண்டென்பர். ஒன்று உயிர்கள் மூலமாக வருவது. இன்னொன்று வெய்யில், மழை, பனி முதலிய பௌதீக காரணங்களால் வருவது. மற்றது இவ்வாறான காரணங்கள் வரையறுக்க முடியாத விதத்தில் நோய், புதையல் என்பது போல அதிர்ஷ்டம், துரதிர்ஷ்டம் என வருவது.


உயிர்கள் மூலமாக வரும் தீமைகளுக்கு மிகக் கொடிய விலங்குகளால் உண்டாகும் துன்பங்களையும் உயிர்கள் மூலமாகவரும் நன்மைகளுக்கு நண்பர், உறவினர் முதலியவர்களால் வரும் நன்மைகளையும் உதாரணமாகக் காணலாம். இத்தகைய மூன்று காரணங்களாலும் நன்மை தீமை என்பன கிடைப்பதற்குக் காரணம் உலக காரணரானவர் இறைவனே!

இவ்வாறு எளிதாக நிச்சயிக்கத்தக்க சாதாரண உண்மைகளின் அடிப்படையில் தான் சூரியனுக்கு நாம் நன்றி தெரிவித்து விழா எடுக்கின்றோம். அப்படி எடுக்கும் விழா தமிழர்களின் மனிதப் பண்புக்கும் நன்றியுணர்விற்கும் அடையாளமாக விளங்குகின்றது. இவ்வாறான விழா வெறும் சடங்காக மட்டும் நிற்காது தெய்வீக நலனையும் அளிக்கும் என்பதை தமிழ்ச்சமுதாயம் உணர்ந்துள்ளது.

இந்த அடிப்படையில் நன்றி செலுத்தக் கிடைத்த இந்நன் நாளாம் பொங்கல் திருநாளில் எங்கள் எல்லோரது இன்னலும் அகன்று இனிதே அமைதி எங்கும் பிறக்க நாம் அனைவரும் சூரியபகவானை வேண்டுவோம்.

- நதிரங்கை -

★



## கவிதைப் பொங்கல்

### தை மகளே வருவாய்!

தை மகளே வருவாய் - சுதந்திரத்
தை எமக்கே தருவாய்
உடல்வதை உளவதை உயிர்வதை இனவதை
கொடுமைகள் நிகழ்வதைத் தடுத்தெமை விடுவிக்கத்
தை மகளே வருவாய் - சுதந்திரத்
தை எமக்கே தருவாய்
வீரத்தைத் தீரத்தை விடுதலைத் தாகத்தை
மானத்தைக் காப்பதை மதித்தெமை மகிழ்விக்கத்
தை மகளே வருவாய் - சுதந்திரத்
தை எமக்கே தருவாய்
நேசத்தைப் பாசத்தை நிரந்தர வாசத்தைத்
தேசத்தின் பாகத்தில் நிலைத்திடச் செய்திடத்
தை மகளே வருவாய் - சுதந்திரத்
தை எமக்கே தருவாய்

— சிற்பி

### தமிழர் களிபேருவகை பொங்கும்

ஞாயிறும் திங்களும் கோள்களும் விண்ணிலே
நகர்த்திடும் வானிலை அதனால்;
ஆயிடும் மாமழை ஆற்றிலும் ஊற்றிலும்
ஆக்கிடும் பெருவளம் பொங்க;
இயற்கை அன்னை பச்சை உடுத்து
இனியநற் காய்கனி சுமந்து;
நயக்கும் பயனாய் நன்மை முதிர்ந்து
நலம்பெற உயிர்கட் குதவி;
உவக்கும் உழுதொழில் செய்தொழில் மேன்மை
ஊட்டிட ஒப்புர வோடு;
எவர்க்கும் எல்லாம் சமமென வைத்து
ஏற்றமே பொங்கிட நின்றாள்;
பொல்லார் புரட்டால் ஈழ நிலமகள்
பூரிப் பெல்லாம் இழந்து;
எல்லா வளமும் இருந்தும் உரிமை
இல்லா இன்னல் பொங்க:
பலிலாண் டாக வீட்டில் பொங்கற்
பானை குறைவாய்ப் பொங்க;
இல்லார் பொங்க ஏழைகள் பொங்க
ஏக்கம் பொங்க இன்றும்;
வல்லா ராக வாழ்தல் ஒன்றே
வரலா றாகப் பொங்க;
எல்லார் மனமும் தமிழ் ழத்தின்
ஏற்றம் காணப் பொங்கும்.
இந்நாட் பொங்கல் நன்நாள் நாளை
இயம்பும் உணர்வும் பொங்கல்;
பொன்னாள் அந்நாள் சுதந்திர சூரியன்
புத்தொளி பரப்பிப் பொங்க;
மண்ணார் மகிழ விண்ணார் வாழ்த்த
மறத்தார் போற்றத் தமிழர்;
கண்ணார் தமிழீ ழத்தைக் காண்பர்
களிபே ருவகை பொங்கும்.

— முருகனடியான்

### மங்களம் பொங்குக!

தொல்லைகள் தொலைந்திட வேண்டும்; நல்ல
தொன்மைகள் வளர்ந்திட வேண்டும்
அல்லல்கள் அகன்றிட வேண்டும்; தூய
அன்பு ஓங்கிட வேண்டும்;
எல்லையைக் காத்திட வேண்டும்; அதில்
நம்மவர் வென்றிட வேண்டும்
தைமகள் வந்திட வேண்டும்; மங்களம்
தரணியில் பொங்கிட வேண்டும்!

வண்ணை. சே. சிவராஜா

### பொங்கி எழுவோம்!

தைத்திருநாள் ஈழமெங்கும் தமிழ் மணக்கும் பெருநாள்
முத்தான நெல்மணிகள் முறுவலிக்கும் திருநாள்
தமிழன் பட்டினியால் வாடாமல்
பசி போக்க மாரிதனை
கொட்டிவிட்ட ஆதவனை நன்றியுடன் துதிப்போம்!
வணங்கிடுவோம்.

பொங்கியெழு தமிழா பொங்கியெழு
அங்கும் ஓடாமல் அவனியெங்கும் தேடாமல்
தங்கி நின்று பொங்கிடநீ தகுந்த இடம் ஈழம் தான்
பங்கு போட யார் வருவார் பார்த்திடுவோம் -
நாம் இங்கு
பொங்கியெழு தமிழா பொங்கியெழு.

— ப. அன்னலட்சுமி

### உழவர் நாள்

நிலமடந்தை மணிவயிறு திறந்து
செந் நெல்பிறந் தாட
அலம் சுமந்த தோள் காளை
அவை களிப்பில் மிதந்தாட
நலம் நிறைத்து இலம்படை பசி
ஒழித்த பரிதிதனைத் தமிழர்
குலம் துதித்து வளம் சிறக்க
வேண்டிப் பொங்கும் திருநாளே!

பரந்த உலகின் பலம் உழவன்
பாரீர் என்றே அறைகூவி
இரந்த வாழ்வு இனியும்இல்லை
இகத்து ளோர்க்கு எனச்சாற்றி
உரத்தை யற்ற உலகைக் காண
உதிரம் சொரிந்த வர்க்காய் ஆ
சுரந்த பாலில் பொலிந்தஅரிசி
கலந்து பொங்கும் உழவர்நாள்!

— நெடுந்தீவு லக்ஷ்மன்


பொங்கலோ பொங்கலோ என
உரக்க ஒலித்துப் பொங்கிடுவோம்........
மங்கலம் பொங்கும்
✻ பொங்கல் வாழ்த்துக்கள் ✻
நவநாகரீக டிசைன்களுக்கு, உத்தரவாதத்திற்கு, உறுதியான வேலைக்கு
✻ 18 கரட்,20 கரட் நகை உடன் பெற்றுக்கொள்ள
✻ 22 கரட் ஓடருக்கு செய்து கொடுக்கப்படும்
✻ வெள்ளி கால் கொலுசுகள் உடன் பெற்றுக் கொள்ள:
கயல்விழி நகைப்பூங்கா
(தங்கப் பவுண் நகை வியாபாரம்)
224B, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

உழவுக்கும், தொழிலுக்கும் வந்தனை செய்திடுவோம்
இனிய பொங்கல் வாழ்த்துக்கள்
தங்கப்பவுண் நகை வியாபாரத்திற்கு
மைதிலி நகை மாளிகை
190/1A, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

தேவர்களுக்கு பகலின் ஆரம்பம்!!
எமவருககெல்லாம் தைப்பொங்கல் பண்டிகை
கல்யாணி தங்க மாளிகை
உத்தரவாதமான தங்க நகைகளை பெற்றுக் கொள்ளலாம்
குறிப்பு:
அன்ரன் லக்ஷா ஜுவல்லர்ஸ்
பெயர் மாற்றம் செய்யப்பட்டது.
189 A, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

''பொங்கல் நல்வாழ்த்துக்கள்''
நவீன அழகிய தங்க ஆபரணங்களுக்கு சிறந்த ஸ்தாபனம்
வீனஸ் தங்க மாளிகை
187 கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

அன்பர்கள், நண்பர்கள், வாடிக்கையாளர்களுக்கு
★ பொங்கல் நல்வாழ்த்துக்கள் ★
நவீன, அழகிய, தங்க ஆபரணங்களுக்குச் சிறந்த ஸ்தாபனம்
ஜெயச்சித்ரா நகை மாளிகை
தங்கப்பவுண் நகை வியாபாரம்.
177D, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

எங்கெங்கு நோக்கினும் அங்கெல்லாம்
பொங்கல் வாழ்த்தொலி கேட்கிறது
அன்றும், இன்றும் தரமான
ஐஸ்கிறீம் வகைகளுக்கு
மங்காப் புகழ்பெற்ற ஒரே இடம்
லிங்கம் கூல் பார்
வெலிங்டன் சந்தி, யாழ்ப்பாணம்.

அனைவருக்கும் மங்கள
★ பொங்கல் வாழ்த்துக்கள் ★
அழகிய தங்கப்பவுண் நகைகளுக்கு
நதியா ஜுவல்லறி
(ஸ்ரான்லி வடிச் சந்தி)
2, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

★ அன்பர்கள் ★ நண்பர்கள் ★ வாடிக்கையாளர்கள்
அனைவருக்கும்
இனிய புது யுகம் தனில் மலரும்
பொங்கல் நல்வாழ்த்துக்கள்
காலத்துக்கு காலம்
அதி அற்புத டிசைன் நகைகளை
அறிமுகப்படுத்துபவர்
சிறி நதியா நகை மாளிகை
2G, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உதயன் பொங்கல் சிறப்பிதழ் - 1994


அன்பர்கள், நண்பர்கள், வாடிக்கையாளர்கள்
இவர்கள் நெஞ்சுக்குள்ளே இருப்பவர்கள் யார் தெரியுமா?
சுப்பலோ வீடியோ ஸ்தாபனத்தார்.
இவர்களுடன் நாம் கொஞ்சிக் கொஞ்சி பேச
வேண்டும் தானே
இன்றைய இனிய நன்நாளிலே
இனிய பொங்கல் நல்வாழ்த்துக்களை
தெரிவிப்பதில் மிக்க மகிழ்ச்சியடைகிறார்கள்.

**சுப்பலோ வீடியோ ஓடியோ சென்ரர்**
198/5, நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.

★ உங்கள் இல்லங்களில் நிகழும் மங்கள வைபவங்களை இயற்கை வண்ணங்களுடன் வீடியோ படமாக்கிக் கொள்ளவும்
★ T. V. வீடியோ டெக், வீடியோ கமரா போன்றவற்றை உடனுக்குடன் திருத்திக் கொள்ளவும்

**★ எவர் விஷன் ★**
21, மணிக்கூண்டு வீதி.
யாழ்ப்பாணம்.

தைத்திருநாள் வாழ்த்துக்கள்
பொங்குக பெருவாழ்வு!
பத்திரிகை விநியோகஸ்தரும்
தரமான பாண், பணிஸ் மற்றும் இதர பொருள்கள் விற்பனையாளரும்,

**கனகா ரேடர்ஸ்**
திருநெல்வேலி - சந்தி.

தைப்பொங்கல் எல்லாம் தமிழ்ப் பொங்கல் ஆகட்டும்.
சூடாகவும்! சுவையாகவும்
★ ரொட்டி ★ கிழங்கு ரொட்டி, ★ மசாலை
மற்றும் கனிற்ஸ் வகைகளுக்கும்
சிறந்த ஸ்தாபனம்

**வெஸ்கோ கூல்பார்**
இல. 5, பலாலி வீதி,
திருநெல்வேலி.

இன்பம் பொங்கும் பொங்கல்!
எல்லோரும் ஓர் குலமாய் வாழ்வோம்!!

**★ அல்டி ★**
269/1, மின்சார நிலைய வீதி,
யாழ்ப்பாணம்.

எமது உளங்கனிந்த
★★ பொங்கல் நல்வாழ்த்துக்கள் ★★
காலதாமதமின்றி எந்நேரமும்
போட்டோ ஸ்ரற் பிரதிகள் பெற்றுக் கொள்ளலாம்.

**★★ சன்லைட் றைக்கிளீனேர்ஸ் ★★**
யாழ்ப்பாணம்.
கிளை;
கச்சேரியடி,
யாழ்ப்பாணம்.

ஜெயா அழகு சாதன மாளிகை உங்களுக்கு
இத் தைத் திருநாளில் வாழ்த்துக்களைத்
தெரிவித்துக் கொள்கிறது.

**ஜெயா அழகு சாதன மாளிகை,**
177A, மின்சார நிலைய வீதி,
யாழ்ப்பாணம்.
கிளைகள்: ★ 160, நவீன சந்தை,
யாழ்ப்பாணம்.
★ ரேகா 25, 48, பெரியகடை,
யாழ்ப்பாணம்.

தைத்திருநாள் ஈழமெல்லாம்
தழைத்திடும் தைப்பொங்கல்
★ சுவீற் வகைகளுக்கும்
★ சிற்றுண்டி வகைகளுக்கும்.
என்றும் உங்கள் நாவில்! நினைவில்!!

**யாழ். றியோன்ஸ் சுவீற்ஸ் அன் கிறீம்**
352. மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம்,

அன்பர்கள், நண்பர்கள், வாடிக்கையாளர்
ஆகியோருக்கு
எமது இதயங் கனிந்த
∴ பொங்கல் நல் வாழ்த்துக்கள் ∴
✲ எவர்சில்வர் பாத்திரங்கள்
✲ அலுமினியம்
✲ பிளாஸ்ரிக்
✲ மற்றும் அன்பளிப்பு பொருள்களுக்கு
நீங்கள் நாடவேண்டிய இடம்:

**செல்லாசன்ஸ் சேல்ஸ் சென்ரர்,**
இல. 118 (198), காங்கேசன்துறை வீதி,
யாழ்ப்பாணம்


## மனதிற்கு மாட்சி தரும் நாள் தைப்பொங்கல் திருநாள்

''தை பிறந்தால் வழி பிறக்கும்'' என்பது முதுமொழி ஆம் நெற்றி வியர்வை நிலத்தில் சிந்த உழைத்துப் பயிரிட்டு முற்றிய கதிர்களைப் பார்த்து முறுவலிக்கும் அரும் நாள் பொங்கல் திருநாள். உழவர் பெருமக்களுக்கு இது ஒரு பெருநாள்.

மாரிமறைய ஆதித்தன் இப் பாரினில் தோன்றி பருவ காலங்களுக்கு வழிவகுக்க உரிய நன்னாளாகும். கதிரவன் வருகைக்கு சாமரை வீசுவதுபோல கதிர்கள் முற்றிக் காற்றில் அசைவதும் தாமரை மலர்வதும் கண்கொள்ளாக் காட்சி. இதுவே தமிழ் மக்கள் மனதில் மாட்சிதரும். நொந்துபோன எம் உள்ளத்திற்கு கள்ளமில்லாக் கதிரவன் வழிபாடு தவிர வேறு வழி ஏது?

பொங்கல் தினத்தை உத்தராயண புண்ணிய காலம் எனக் கொள்வர். சூரியன் வட அட்சம் செல்வது உத்தராயணம். உத்தராயணம் தேவர்கள் உதய காலமாகும். பகவான் சூரியனே பருவங்களுக்கு காரண காரியமாகின்றான். ஆகவே ஞாலம் முழுவதும் சைவத்தமிழர்கள் இதன் காலமறிந்து சூரிய பொங்கல் எனமகிழ்ந்து, மஞ்சள் நீராட்டி, எதையும் புதிதாக கரும்பு, வாழைப்பழம் படைத்து சர்க்கரை, தேன் பாகானபொங்கல் ஆக்கி, ஆதித்த ஆராதனை வழிபாட்டுடன் உற்றார், உறவினர்களுடன் கூடி உண்டு மகிழ்கின்றனர்.

இதனைக் கன்னிப் பொங்கல் எனவும் அழைப்பர். பொங்கலன்று முன்னும், பின்னும் இருவகைப் பண்டிகைகள் கொண்டாடும் வழக்கமும் உண்டு. முதல் நாள் இந்திரனுக்கு நன்றி கூறும் நன்னாளாகப் போகிப் பண்டிகை ஆகும். மறுநாள் பட்டிப் பொங்கல். தொட்டில்களிலும், கொட்டில்களிலும் வளரும் ஆவினங்களுக்கு ஆராதனை செய்து பொங்கல் செய்து அவைகளுக்கு ஆப்பிரசாதத்தைக் கொடுத்து என்றும் தங்களுடன் தங்க வேண்டும் என தூபதீபம் காட்டி வழிபடுவர்.

ஆகவே பொங்கல் பெருநாளில் எங்களுக்கு ஒரு வழி தெளிவாகக் கிடைக்க வேண்டுமென வழிபட்டு, இத் திரு நாளில் துன்பம் நீங்கி இன்பம் பெருக, அறம்வளர, நாடு உயர, வீடு உயர, ஆண்டவன் இடத்தில் வேண்டுதல் செய்வோமாக.

**-சைவப்புலவர் பொன். தெய்வேந்திரன்-**

★

## சாந்தமும் அமைதியும் தோன்றுவதற்கு சாதகமாக இயற்கை மகிழும் காலம்

தமிழ் மாதங்களின் முதல் மாதம் தை. இம்மாதத்தின் முதல் திகதியில் சூரியன் மகர ராசியில் பிரவேசிக்கின்றது. இது உத்தராயணத்தின் ஆரம்பம். அப்போது சூரியன் வடக்கு நோக்கிப் பயணம் செய்கின்றது. இது மகா சங்கராந்தி எனப்படும் இத்தினத்தில் சூரியனுக்குப் பொங்கல் படைத்து வழிபடும்விழா தைப்பொங்கல்விழா, சூரியப் பொங்கல் எனவும் அறுவடை விழா எனவும் இது அழைக்கப்படுகின்றது. இது சமுதாய விழாவாகவும் முக்கிய விழாவாகவும் விளங்குகின்றது.

மார்கழி மாத இறுதியில் பழையன யாவும் கழிந்து மனஅழுக்கைப் போக்கி புதுக்கோலம் பேணும் விழா போகிப் பண்டிகை எனத் தமிழகத்தில் கொண்டாடப்படுகின்றது. அதற்கு அடுத்து வருவது பொங்கல்விழா.

கடுங்காற்றிலும் அடைமழையிலும், கடுங்குளிரிலும் அயராது உழைத்த உழவர் பட்ட துன்பம் எல்லாம் நீங்கும் நன்னாள் இது. அறுவடையின் பயனை மக்கள் எல்லோரும் அனுபவிக்கும் பொன்னாள்.

புதுப்பானையில் புத்தரிசியும் கரும்பின் சர்க்கரையும் பசும்பாலும் சேர்த்துப் பொங்கி சூரியனுக்குப் படைத்து, செழுமையையும், இனிமையையும் குறிக்கும். பால், பழம், கரும்பு, இளநீர், மஞ்சள், பயறு முதலிய விவசாய பொருள்களையும் சேர்த்துப்படையல் செய்து வழிபாடியற்றி உறவினர், அயலவர், விருந்தினர் ஆகியோருடன் பகிர்ந்துண்ணும் இன்பநாள். பானையில் பால்பொங்குவது போல மக்கள் உள்ளங்களில் உவகை பொங்கும். நாட்டில் இன்பம் பொங்கும். பொங்கும் மங்களம் எங்கும் தங்கும்.

இது உழவர் திருநாள். உலகிற்கு உணவிடும் உழவர் பெருமக்கள் உலக ஒளிக்கடவுளாகவும் உணவு சிறக்க உதவுபவராகவும் விளங்குகின்ற சூரிய பகவானுக்கு விழா எடுக்கும் நாள்.

''சுழன்றும் ஏர்பின்னது உலகு'' ''உழுவோர் உலகுக்கு அச்சாணி'' என்பவற்றால் அவர் பெருமை விளக்கும் அத்துடன் உழவுத் தொழிலுக்கு உறுதுணையாக இருக்கும் பசுக்களையும், எருதுகளையும் அவர்கள் மறப்பதில்லை. அடுத்த நாள் அவற்றிற்கு பட்டிப் பொங்கல் செய்கின்றார்கள். இது உயிர் நேயத்தை உணர்த்தும் விழா. அத்துடன் நன்றி உணர்வை வெளிப்படுத்தும் விழா.

தை மாதம் முதல் இயற்கை குதூகலமாக விளங்குகின்றது, இதனால் எங்கும் மலர்ச்சி பொங்குகின்றது. தை பிறந்தால் வழி பிறக்கும். அது மைவிழி மங்கையர்க்கு வாழ்வளிக்கும் மாதம். எனவே இல்லம் சிறக்க நல்லதைச் செய்யும் எல்லோரும் வரவேற்கும் தொல்விழா மாதமான

(5 ஆம் பக்கம் பார்க்க)

**வாசுகி சிவராமலிங்கம்**


அருணோதயத்திற்கு அமுதம்
பொங்கிப் படைக்கும் அன்பர்களுக்கு
அருணோதயம்
புகைப்படக் கலையக வாழ்த்துக்கள்!
உங்கள் புகைப்படத் தேவைகளுக்கு

**அருணோதயம் புகைப்படக் கலையகம்**
218, பலாலி வீதி, கந்தர்மடம் சந்தி,
யாழ்ப்பாணம்.

உழவர் திருநாளாம் தைத்திருநாள்!
பெருசிப் பெருவாழ்வு பெறுவோம்!!

ஈழமணித் திருநாட்டின் இதயம் கவரும்
தங்க ஆபரணங்களுக்கும்
22 கரட் தங்க நகைகள் உத்தர
வாதத்துடன் செய்து பெற்றிட



**ஞான துர்க்கா**
நகை மாளிகை
218H கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

இனிய பொங்கல் வாழ்த்துக்கள்
அழகிற்கு அழகு செய்யும் அழகிய
தங்கப்பவுண் நகைகளுக்கும்,
அசல் 22 கரட் நகைகளுக்கும் சிறந்த ஸ்தாபனம்:

**அலங்கார் நகை மாளிகை**
தேவி பிளாசா பில்டிங்,
21/7, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்:


**பொங்கல் திருநாளே**
**புதுயுகம் படைத்திடு!**

தங்கத் தலைவரின் தமிழீழ வரலாற்றில்
மங்காப் புகழ் படைக்கும் மாவீரர் மாண்போடு
எங்கள் திருநாடு தமிழ் ஈழம் மலர்ந்திட
பொங்கல் திருநாளே தீர்வு வகுத்திடு.

★ ★ ★

'' மக்கள் நாங்கள் ஒன்று சேருவோம்
மண்ணை மீட்கும் புலி வீரரோடு''

**- யாழ். வர்த்தகர் சங்கம்.**


வாடிக்கையாளர்கள், பாவனையாளர்கள்,
அனைவருக்கும் எமது நன்றி கலந்த
பொங்கல் வாழ்த்துக்கள்
எம்மிடம் உள்ளூரிலிருந்து தயாரிக்கப்பட்ட

**ஜீவாகாரம்**
மற்றும்
★ ஆட்டாமா ★ அரிசி மா
★ குரக்கன் மா ★ உழுந்து மா
★ கடலை மா ★ மிளகாய்த் தூள்
மொத்தமாகவும், சில்லறையாகவும்
பெற்றுக் கொள்ளலாம்.

**அண்ணா கோப்பிக்கடை**
யாழ்ப்பாணம், திருநெல்வேலி,
இணுவில்.

பொங்கல் வாழ்த்துக்கள்
எமது அன்பர்கள், ஆதரவாளர்கள், வாடிக்கையாளர்கள்
யாவருக்கும் பொங்கல் திருநாளில்,
துன்பங்கள் நீங்கி இன்பங்கள் பெருகி சமாதானத்துடன்
வாழ்கவென வாழ்த்துகிறோம்.

**கலக்சி**
புகைப்பட
சேவை
337, 1ஆம் மாடி
கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

உளங் கனிந்த பொங்கல் நல்வாழ்த்துக்கள்
ஆடவர், மங்கையர், சிறுவர், சிறுமியர்
அனைவருக்கும் ஏற்ற சகலவிதமான
றெடிமேட் ஆடைகளும், சாறி வகைகளும்
மலிவாகப் பெற்றுக் கொள்ள:

**✲ சீமாட்டி ✲**
122 மின்சார நிலைய வீதி,
யாழ்ப்பாணம்

மங்களம் பொங்கிடும்
பொங்கல் நல்வாழ்த்துக்கள்
கண் பரிசோதித்துக் கண்ணாடி கொடுப்பவரும்,
பல்கட்டுபவரும்

**D. சேனாதிராஜா**
இல. 4, பருத்தித்துறை வீதி,
ஆஸ்பத்திரிச் சந்தி,
யாழ்ப்பாணம்.

நண்பர்கள், வாடிக்கையாளர்கள், ஆதரவாளர்கள்
அனைவருக்கும்
எமது தைப்பொங்கல் வாழ்த்துக்கள்
''விழி உங்களிடம் அதன்
ஒளி எங்களிடம்''
சகல வித மூக்குக் கண்ணாடிகளுக்கும்

**✲ எரிக் கணேஷ் ✲**
566, ஆஸ்பத்திரி வீதி, யாழ்

பொங்கல் நல்வாழ்த்துக்கள்
★ யாழ். நகரில்
பழைய, புதிய படங்களைப் பதிவு செய்யவும்
வாடகைக்குப் பெறவும் சிறந்த இடம்;

**✲ குணம் வீடியோ சென்ரர், ✲**
**(KUNAM VIDEO CENTRE)**
42, CLOCK TOWER ROAD, JAFFNA.

அனைவருக்கும் மங்களம் பொங்கிட
✲ பொங்கல் நல்வாழ்த்துக்கள் ✲
உத்தரவாதமான 22 கரட் தங்கத்தில் தரும்
தரமான - நம்பிக்கையான
நகை வியாபாரிகள்

**மதி ஜுவல்லறி**
226, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

இசையோடு இனிய பொங்கல் மலர்ந்திட
பாரத் படங்கள் அழகாகப் பொலிந்திட
அனைவருக்கும்
✲ பொங்கல் வாழ்த்துக்கள் ✲
சிறந்த ரக கலர், கறுப்பு வெள்ளைப் படங்களுக்கு
அன்றும், இன்றும் பெயர் பெற்றவர்கள்

**பாரத் ஸ்ரூடியோ**
82A, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

தமிழர் வாழ்வில் இன்பம் பொங்குக!

**மிக் கைத்தொழில் நிறுவனம்**
26 26/1, சிவன் புது வீதி, திருநெல்வேலி, யாழ்ப்பாணம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
292/2, நாவலர் வீதி.
யாழ்ப்பாணம்.

## பொங்கல் சங்கற்பம்

இன்று தைப்பொங்கல் திருநாள். தமிழர்களின் பண்பாட்டுப் பெருநாள். மனிதர் உய்வதற்கு உணவளிக்கும் உழவர்களின் நன்னாள். தை பிறந்தால் வழி பிறக்கும் என்ற நம்பிக்கையுடன் தமிழ் மக்கள் வரவேற்று கொண்டாடும் நாள்.

மாரி மழை பெய்து, கனனிகள் எல்லாம் செந்நெல் நிறை வயல்களாக வளம் காணும் காலமாக விளங்குவது தை மாதம். இனிவரும் மாதங்களில் சோற்றுக்குப் பஞ்சமில்லை என்று எல்லோரது நெஞ்சங்களும் குளிரும் காலம்.

பசியிலிருந்து தன்னையும், உலகையும் காப்பாற்றும் பேருதவியைச் செய்த உதயனுக்கு உழவன் நன்றி செலுத்தும் வகையில் தைப்பொங்கல் விழா ஆரம்பமானது. உழவன் மட்டுமன்றி ஏனைய சகல மக்களும், உழவன் ஊடாக தமக்கு உணவளித்த ஞாயிறுக்கு நன்றி தெரிவித்து, பொங்கிப் படையல் செய்து, அவனைத் துதிக்கும் நாளாகவும் இது விளங்குகிறது.

பூமியில் உயிரினங்கள் வாழ்வதற்கு பல வகைகளாலும் உதவுபவன் உதயனே. உலகம் என்ற இந்தப் பூமி இயங்குவதே உதயனால் தான். அதனால் ஞாயிறை கடவுளாகக்கண்டு வணங்கும் நடைமுறை மிகப் பழமை வாய்ந்தது. ஞாயிறு போற்றுதும், ஞாயிறு போற்றுதும் எனத் துதித்தனர் புலவர்கள்,

உதயன் நாயகனாகவும் மண் மகள் நாயகியாகவும் உருவகிக்கப்படுவது உண்டு. தை பிறந்ததும் மண்மகள் மலர்ந்து மனம் பூரிக்க தனது நாயகனாம் உதயனை இதயம் இனிக்க வரவேற்கும் நாள்

மண்மகள் மகிழ்ந்தால் மக்கள் இன்பம் எய்தாமல் இருக்க இயலுமோ? இல்லை. அதனால் நிலமகள் சார்பில் அவளின் பணியாட்களான மனிதர்களும் தமக்கு என்றும் மங்களம் நல்குமாறு உதயனை வரவேற்று, நன்றி கூறி, வணங்கும் பாங்கினையும் பொங்கல் நாளில் காண்கிறோம்.

ஈழத் தமிழ் மக்கள் தமது பிறப்புரிமையான சுதந்திரத்துக்காகப் போராடிக் கொண்டிருக்கும் வேளை இது. அந்தச் சுதந்திரப் போராட்டத்தை நசுக்குவதற்காக தமிழர்கள் மீது பொருளாதார முற்றுகை போடப்பட்டிருக்கிறது. அது தமிழர்களுக்கு விடுக்கப்பட்ட பெரும் சவாலுமாகும். இந்தச் சவாலை ஏற்று, தங்கள் பொருளாதாரத்தை கட்டி வளர்க்க வேண்டிய பெரும் பணி ஒவ்வொரு தமிழனையும் சார்ந்து நிற்கிறது.

தைப்பொங்கல் திருநாளை வெறும் பாரம்பரிய கொண்டாட்டமாகவும், பண்பாட்டு நன்னாளாகவும், பொங்கிப் படைக்கும் நாளாகவும் மட்டும் கருதக்கூடாது. ஈழத் தமிழர்களைப் பொறுத்த வரையில் பொருளாதார வளர்ச்சியின் அவசியத்தை உணர்த்தும் நாளாகவும், மிகக் குறிப்பாக சுயசார்புப் பொருளாதாரத்தை ஈட்டும் தேவையை உணர்த்தும் நாளாகவும் அது கொள்ளப்பட வேண்டும்.

பொருளாதாரம், சுயசார்ப்புப் பொருளாதாரம், விவசாயத்துறை மேம்பாடு, கைத்தொழில் அபிவிருத்தி, மீன்பிடி அபிவிருத்தி என்ற சொற்றொடர்கள் சொல்வதற்கு இலகுவானவை. கேட்பதற்கு இனிப்பாகவும், மினுக்காகவும் உள்ளவை. ஆனால் அவற்றை அடைவதற்குக் கடின உழைப்பு முக்கியமானது.

பொங்கல் திருநாள் விவசாயத்துடன் தொடர்புடைய பண்டிகை. எனவே இன்றைய நன்னாளில் விவசாய உற்பத்திகளை அதிகரிப்பது குறித்தும், எங்கள் மண் வளத்துக்கும், காலநிலைக்கும் உகந்த விளை பொருள்களைப் பயிர் செய்வது குறித்தும் நாம் சிந்திக்க வேண்டும். வெறும் சிந்தனை பயன் தராது. சிந்தனையைச் செயற்படுத்த வேண்டும். அதற்கு உழைப்புத் தேவை.

இன்றைய பொங்கல் திருநாளில், பொருளாதார மேம்பாடு நாடிய, விவசாய அபிவிருத்தி நாடிய சிந்தனை, செயல், உழைப்பு ஆகிய மூன்றையும் அந்த மூன்றை வளர்க்க வல்ல உணர்வையும் உருவாக்குவதற்குத் சங்கற்பம் செய்வோமாக.

ரூ $2\frac{1}{2}$ கோடி பெறுமதிமிக்க

# வெள்ளி பாளங்கள் கடத்திய 3 சிப்பாய்கள் கைது!

கொழும்பு, ஜன. 14

இரண்டு கோடி 70 லட்சம் ரூபா பெறுமதியான வெள்ளிப் பாளங்களை கடத்த முயன்ற மூன்று இராணுவச் சிப்பாய்களை புத்தளம் பொலீஸார் கைது செய்தனர்.

கடந்த வாரம் கற்பிட்டியில் உள்ள மாம்பிரிக் கிராமத்துக்கு அருகில் கடற்கரைப் பகுதியில் 83 வெள்ளிப்பாளங்களை புத்தளம் பொலீஸார் கைப்பற்றினர். அப்போது சிப்பாய்கள் மூவருடன் சுழியோடப்பட்ட அறுவரும் கைது செய்யப்பட்டனர்

கற்பிட்டிக்கு அப்பாலுள்ள கடலிலிருந்து கப்பல் ஒன்றில் இருந்து இறக்கப்பட்ட இந்த வெள்ளிப் பாளங்கள் நைலோன் வலையில் சுற்றப்பட்டு கரை சேர்க்கப்பட்டதாகப் பொலீஸார் தெரிவித்தனர்.

(ஒ-3)

## ஜி. சீ. ஈ. முடிவுகள் மார்ச்சில் தெரியும்

கொழும்பு, ஜன. 14

கடந்த மாதம் நடை பெற்ற ஜி. சீ. ஈ. சாதாரண தரப் பரீட்சைப் பெறுபேறுகள் எதிர்வரும் மார்ச் மாதத்தில் வெளியாகும் என அறிவிக்கப்படுகிறது. (ஒ-6)

# பொங்கல் தின நிகழ்ச்சிகள்

தொல்புரம் நட்புறவுக் கழகத்தின் பொங்கல் விழா இன்று பிற்பகல் 3 மணிக்கு தொல்புரம் கிழக்கு துரையன் வளவு பிள்ளையார் கோயில் முன்றிலில் செல்வன் தா. தவமன்னன் தலைமையில் நடைபெறும்.

இவ்விழாவில் பிரமுகர்களின் சிறப்புரைகள், கவியரங்கம், சிறுவர் நிகழ்ச்சிகள், நாடகங்கள் ஆகியன இடம் பெறும். (க-28)

★ ★ ★

யாழ். மாநகராட்சி மன்ற ஊழியர் நலன்புரிச் சங்கம் நடத்தும் பொங்கல் இன்னிசை விழா இன்று பிற்பகல் 3 மணிக்கு நாவலர் கலாசார மண்டபத்தில் நடைபெறும்.

யாழ். மாநகர ஆணையாளர் திரு. வே. பொ. பாலசிங்கம் தலைமையில் நடைபெறும் விழாவில் இன்னிசை வேந்தர் பொன். சுந்தரலிங்கத்தின் பாட்டு இடம்பெறும்.

★ ★ ★

நெல்லியடி சனசமூக நிலையத்தினரின் பொங்கல் விழா இன்று பிற்பகல் 4 மணிக்கு நிலைய முன்றிலில் திரு. ஆ. சிவநாதன் தலைமையில் நடைபெறும்.

விழாவில் கலை நிகழ்ச்சிகள், பட்டி மண்டபம், இன்னிசை கானம், நாடகங்கள் ஆகியனவும் இடம்பெறும். (க)

★ ★ ★

பொங்கல் தினத்தை யொட்டி சிநேகபூர்வமான உதைபந்தாட்டப் போட்டி இன்று வட்டுக்கோட்டை துணைவி தமிழன் சனசமூக நிலைய மைதானத்தில் பிற்பகல் 4 30 மணிக்கு நடைபெறும்.

அராலி மேற்கு ராஜன் கதிர்காமர் பொதுப்பணி விளையாட்டுக் கழக அணிக்கும் தமிழன் சனசமூக நிலைய அணிக்கும் இடையில் போட்டி நடைபெறும். (க-161)

★ ★ ★

வட்டுக்கோட்டை துணைவியில் உள்ள காரைநகரில் இருந்து இடம்பெயர்ந்தோர் முகாமில் இன்று பொங்கல் தினத்தில் பிற்பகல் 1 மணிக்கு சனசமூக நிலையம் ஒன்று திறந்து வைக்கப்படும்.

★ ★ ★

அராலி மேற்கு பைந்தமிழ் சனசமூக நிலையம் இன்று பொங்கல் தினத்தில் அராலி மேற்கிலும் வட்டுக்கோட்டை சமாதானக் கோட்டையிலும் உள்ள மாணவர்களுக்கு கொப்பிகளையும் எழுதும் உபகரணங்களையும் வழங்கவுள்ளது

(க-161)

★ ★ ★

யாழோசை மன்றத்தின் இசை நிகழ்ச்சி பொங்கல் தினமான இன்று மாலை 2 30 மணிக்கு திருநெல்வேலி வை. எம். சி. ஏ. மண்டபத்தில் நடைபெறும். இதில் யாழோசை – 94 இசைக்குழுவின் பரீட்சார்த்த இசை நிகழ்வும் இடம்பெறும். (அ-162)

★ ★ ★

தைப்பொங்கல் தின உதைபந்தாட்டப் போட்டி இன்று பிற்பகல் 3 30 மணிக்கு கோப்பாய் வடக்கு கோல்ட் ஸ்ரார் விளையாட்டுக் கழகத்தில் நடைபெறும்.

இதில் நாவாந்துறை சென். மேரிசை எதிர்த்து றிங்கோ ஸ்ரார் விளையாட்டுக் கழகமும், புங்குடுதீவு அம்பாளை எதிர்த்து திருநகர் பாரதி விளையாட்டுக் கழகமும் மோதுகின்றன. (அ-162)

★ ★ ★

ராஜன்ஸ் இசையில் சாந்தன் முதன் முறையாக இணைந்து பாட ராஜன்ஸ் படைக்கும் ''இன்னிசை பொங்கல்'' இசை நிகழ்ச்சி இன்று பிற்பகல் 2 30 மணிக்கும் மாலை 7 மணிக்கும் யாழ். வேம்படி மகளிர் கல்லூரியில் நடைபெறும்.

(இ-162)

★ ★ ★

மந்திகை, ஜன. 14

தென் புலோலி பெரிய தேவனத்தாய் சனசமூக நிலையம் ஆண்டு தோறும் நடத்தும் ''தென் புலோலியூர் அறிஞர்கள் விழா'' தைப் பொங்கல் தினமாகிய இன்று சிறப்பாக நடைபெறவுள்ளது.

மாலை 6-30 மணிக்கு ஆரம்பமாகும் இந் நிகழ்வில் நினைவுரைகள், விடுதலைப் புலிகளின் முக்கிய பிரமுகர்களின் சிறப்புரைகள், கவியரங்கு, பட்டி மண்டபம் மற்றும் கலை நிகழ்ச்சிகள் இடம் பெறும். (ஒ-87)

# மாணவர் எண் எழுத்தை முறையாக கற்க வேண்டும்

## நூல் வெளியீட்டில் உரை

வலிகாமம் தெற்கு, ஜன. 14

''எமது மண்ணில் தாய் மொழியில் உச்சரிக்க எழுத முடியாத நிலையில் தரம் குன்றி இருப்பது வேதனையளிக்கிறது. எண்ணையும், எழுத்தையும் முறையாக மாணவர்கள் தாமே கற்க முன் வர வேண்டும்''

விடுதலைப் புலிகளின் மாணவர் அமைப்பு-மருதனார்மடம் கல்விக் கோட்டத்தினரின் 'வழிகாட்டி' நூல் வெளியீட்டில் கல்வி மேம்பாட்டுப் பேரவை துணைப் பொறுப்பாளர் திரு. வே. பாலகுமார் இவ்வாறு கூறினார்.

இராமநாதன் கல்லூரியில் திரு. க. செழியன் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில், வழிகாட்டி சஞ்சிகையை வெளியிட்டு வைத்து திரு. பாலகுமார் உரையாற்றினார். உலகின் பல நாடுகளிலும் மாணவர் போராட்டங்கள் பல நடைபெற்றுள்ளன. பல்வேறு சக்திகளின் தூண்டுதலின்பேரில் அவை நடைபெற்றதால் விரைவிலேயே முடிவுக்கு வந்தன. தமிழீழத்தில் மாணவர் போராட்டம் வித்தியாசமானதாக அமைந்துள்ளது. மாணவர்களின் எழுத்தாற்றல் திறன்கள் அடையாளம் காணப்பட்டு அவை தூண்டப்பட வேண்டும். அதற்கு 'வழிகாட்டி' சஞ்சிகை துணைபுரிய வேண்டும்.

இப்படி அவர் கூறினார்.

சஞ்சிகைக்கு அட்டைப் படம் வரைந்த திரு. கு. சூரியகுமார், யாழ். மாவட்ட அரசியல் துறை பொறுப்பாளர் திரு. ச. இளம்பருதியினால் கௌரவிக்கப்பட்டார்.

மதிப்பீட்டுரையினை பல் கலைக்கழகப் [illegible] கலாநிதி அ. சண்முகதாஸ் நிகழ்த்தினார். (க-152)

சாந்தமும் ..

(4 ஆம் பக்கத் தொடர்ச்சி)

தையை பொங்கி வரவேற்போம்.

உள்ளத்தை மூன்று குணங்கள் மாறி மாறி ஆட்சி செய்கின்றன. தாமத குணம், இராசதகுணம், சத்துவகுணம் என்பனவே அவையாகும். இறுதியாகக் கூறப்பட்ட சத்துவகுணமே சாந்தமும், அமைதியும் ஏற்படுத்துவது.

சாந்தமும், அமைதியுமே உள்ளத் தூய்மையை ஏற்படுத்தும் சத்துவ குணத்தை வளர்க்கச் சாதனமாக அமைந்தவையே விசேட நாட்கள். இயற்கை குதூகலம் நிறைந்து தோற்றமளிக்கும் நாட்களும், சத்துவகுணத்தை வளர்ப்பனவாகும். எனவே தை முதல் நாளை பொய்மை நீக்கி நாம் உய்யும் வழி காட்ட மெய்யன்புடன் வரவேற்போம்.

★

# ஆயுதங்களை போடும் வரை பேச்சுக்கள் சாத்தியப் படா!

## தளபதிக்கு அஸ்கிரிய பீடாதிபதி விளக்கம்

கொழும்பு, ஜன. 14

''தமிழ்த்தீவிரவாதிகள் ஆயுதங்களை கீழே போடும் வரை எந்த பேச்சுவார்த்தையும் சாத்தியப்படாது.

விடுதலைப்புலிகளை நம்ப முடியாது. அவர்களுடன் எந்த உடன்பாட்டையும் ஒப்பந்தத்தையும் செயல்படுத்த முடியாது இயல்பு நிலையை ஏற்படுத்திய பின்னர்தான் பேச்சுக்களும் மாநாடுகளும் நடத்த முடியும்''

இவ்வாறு கூறினார் அஸ்கிரிய பீடாதிபதி சந்தானந்த தேரர்.

புதிய இராணுவத் தளபதியாக பதவியேற்றதும் லெப்டினன்ட் ஜெனரல் ஜெரி டி சில்வா அஸ்கிரிய பீடாதிபதியைச் சந்தித்து ஆசிபெற்றார்.

அப்போது புதிய தளபதியிடம் இனப்பிரச்சினை பற்றிய தனது கருத்தை சந்தானந்த தேரர் வெளியிட்டார். அவ்வேளையிலேயே மேற்படி தமது கணிப்பை புதிய தளபதியிடம் அவர் சொன்னார்.

''இராணுவத்தைவிட்டு சுமார் 12 ஆயிரம் சிப்பாய்கள் தப்பி ஓடிவிட்டனர். அவர்களைக் கண்டுபிடித்து படையில் மீண்டும் சேர்க்கும் முயற்சி பூரணமாக வெற்றியளிக்கவில்லை'' —என்று இராணுவத் தளபதி அஸ்கிரிய பீடாதிபதியிடம் சொன்னார்.

எச்சரிக்கை

துண்டுப்பிரசுரம்

சண்டிலிப்பாய், ஜன. 14

வாந்திபேதி நோய்த் தடுப்பு ஏற்பாடுகளில் ஒரு கட்டமாக தமது பிரிவிலுள்ள உணவு விடுதிகள், தேநீர் கடைகள், பாண் பேக்கரிகள் ஆகியவற்றில் சுகாதார விதிகளை அனுசரிக்குமாறும் சுத்தமாக வைத்திருக்குமாறும் சண்டிலிப்பாய் பிரதேச செயலரும், வலி தென் மேற்கு பிரதேச சபை விசேட ஆணையாளருமான திரு கா சந்திரராசா முன்எச்சரிக்கை துண்டுப் பிரசுரம் ஒன்றை வெளியிட்டுள்ளார். (ஒ-135)

## எம். எல். ரி பரீட்சை

யாழ்ப்பாணம், ஜன 14

சுகாதாரத் திணைக்கள ஆய்வுகூட தொழில் நுட்பவியலாளர் (எம்.எல்.ரி) பதவிக்கு ஆட்களைச் சேர்ப்பதற்கான பரீட்சை எதிர்வரும் 22 ஆம் திகதி யாழ்ப்பாணத்தில் அமைக்கப் பட்டுள்ள பரீட்சை நிலையங்களில் நடைபெற உள்ளது.

இப்பரீட்சைக்கான அனுமதி அட்டைகள் 20 ஆம் திகதிக்கு முன் கிடைக்காதவர்கள் யாழ் கல்வித் திணைக்களத்துடன் தொடர்பு கொள்ளுமாறு அறிவுறுத்தப்படுகின்றனர். (இ-162)

## தமது உயிருக்கு ஆபத்து என்கிறார் காமினி

கொழும்பு, ஜன. 14

வழங்கப்பட்டு வந்த பாதுகாப்பு விலக்கப்பட்டதைத் தொடர்ந்து தமது உயிருக்கு ஆபத்து ஏற்பட்டிருப்பதாக ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணித் தலைவர் காமினி திஸநாயக்கா பொலீஸ்மா அதிபருக்கு முறையிட்டுள்ளார். (ஒ-எ)

## கூட்டம்

காங்கேசன் சிமெந்துத் தொழிற்சாலை சகல ஊழியர்களும் நாளை சனிக்கிழமை காலை 9 மணிக்கு யாழ் இந்துக்கல்லூரி பிரார்த்தனை மண்டபத்தில் முக்கிய விடயங்கள் பற்றி கலந்தாலோசிப்பதற்கு தவறாது சமுகமளிக்கும்படி கேட்டுக் கொள்ளப்படுகின்றனர். (க)

கமக்காரர்

அடையாள அட்டை

அளவெட்டி, ஜன. 14

மாசியப்பிட்டி அளவெட்டி செட்டி சனசமூக நிலையத்தினர் அண்மையில் 35 பேருக்கு கமக்காரர் அடையாள அட்டைகளை விநியோகித்தனர். (க-13)

## வீதி திருத்தம்

வடமராட்சி, ஜன. 14

அல்வாய் கிழக்கு தெருமூடி மடத்தடி - தம்பசிட்டி வீதி திருத்தியமைக்கப்பட்டுள்ளது.

பெருந்தெருக்கள் திணைக்களத்தால் இவ்வீதி திருத்தியமைக்கப்பட்டுள்ளது. (ஒ-173)

## நன்கொடை வைப்பு விழா

தமிழீழ கல்வி மேம்பாட்டுப் பேரவையின் தமிழீழக் கல்வி மேம்பாட்டு நிதிய மாவட்ட மட்ட நன்கொடை வைப்பு விழா இன்று வெள்ளி பிற்பகல் 3 மணிக்கு யாழ் இந்துக் கல்லூரி குமாரசாமி மண்டபத்தில் நடைபெறும்.

## கருத்தரங்கு

யாழ்ப்பாணம், ஜன. 14

யாழ்ப்பாணம் லயன்ஸ் கழகத்தினரின் பிராந்தியக் கருத்தரங்கு நாளை சனிக்கிழமை வேம்படி மகளிர் கல்லூரியில் நடைபெற உள்ளது.

நாளை காலை 9 20மணிக்கு ஆரம்பமாகும் இக் கருத்தரங்கில் மாவட்ட ஆளுநர் ஹுசெயின் ஏ பஹைலா பிரதம விருந்தினராகக் கலந்து கொள்கிறார்.

கருத்தரங்கில் யாழ். லயன்ஸ் கழகத்தின் புற்றுநோய் நிதியத்தை யாழ். அரச அதிபர் திரு கா. மாணிக்கவாசகர் அங்குரார்ப்பணம் செய்து வைப்பார்.

யாழ் மாவட்டத்தில் உள்ள ஆஸ்பத்திரிகளுக்கு'கிறையோ' இயந்திரங்களும் இங்கு அன்பளிப்புச் செய்யப்படும். (அ)

## இன்று

சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை பண்பாட்டுப் பேரவை தொண்டமனாறு ஸ்ரீசெல்வச் சந்நிதி முருகன் ஆலயத்தில் நடத்தும் வாராந்த நிகழ்வுகளில் இன்று வெள்ளிக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு சங்கீத பூஷணம் திரு. செ. குமாரசாமியின் இன்னிசை விருந்து இடம்பெறும். (க)

யுத்தத்தை ·

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

நிறுத்துவதற்கான தமது ஆவலை சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடம் தெரியப்படுத்த வேண்டும். இந்த முயற்சியில் சமூக தொடர்பு சாதனங்கள் மக்களுக்கு உதவவேண்டும்.

10 வருடங்களுக்கு மேலாக நடைபெற்றுவரும் போரினால் 10 ஆயிரத்துக்கும் அதிகமானோர் உயிரிழந்துள்ளனர். 10 லட்சத்துக்கு மேற்பட்டோர் இடம்பெயர்ந்துள்ளனர்.

இந்தப்போர் ஒவ்வொரு வரது வாழ்வின் ஒவ்வொரு நிமிடங்களிலும் கவலையை அளித்து வருகிறது – எனத் தெரிவித்துள்ளார். (இ-5)

மூடி மறைக்க---

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

விசேட பொலீஸ் காவல் இருந்த போது இடம்பெற்றுள்ளது என்றும் —

அதனைச் செய்தது யார்? ஏன் செய்யப்பட்டது? என்பன போன்றவை குறித்து அரசோ பொலீஸோ எவ்வித நடவடிக்கையும் எடுத்ததாகத் தெரியவில்லை என்றும் அவர் தமது அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார். (இ-எ)

## பாலே நீ பொங்கு!

இன்பமே எங்கும் பொங்க
இதயத்தில் அன்பு பொங்க
நன்மையே நாளும் பொங்க
நலம்தரும் வளமும் பொங்க
உன்னதத் தொழிலும் பொங்க
உழவரின் உயர்வும் பொங்க
என்றும்நல் அமைதி பொங்க
பொங்கிடு பாலே நீயும்!

நாயன்மார்கட்டு ப மகேந்திரதாசன்

## நீங்கட்டும் இன்னல்

| | | |
|---|---|---|
| பொங்கட்டும் | புதுப்பானை | அரிசி |
| நீங்கட்டும் | தமிழர் | இன்னல் |
| தங்கட்டும் | தரணியில் | இன்பம் |
| பூக்கட்டும் | தமிழர் | வாழ்வு |
| ஓங்கட்டும் | எங்கள் | புகழ் |
| எங்கள் | இன்னல் | நீங்கட்டும் |
| மங்கள | வாழ்வு | மலரட்டும்! |

— சி. சபாநாதன்

## பொங்குக தமிழைப் போல

பொங்கிடும் கடலைப் போலே
புலிகளின் வீரம் காணும்
பொங்கிடும் போரில் வெற்றி
புதியதோர் சரித்திரம் படைக்கும்
பொங்கிடும் படையல் போல
பொற்தமிழ் ஈழம் தோன்றும்
பொங்கிடும் பாலைப் போலே
பொலிந்திடும் செல்வம் வந்து
பொங்கிடும் இன்பம் என்றும்
புதுமணப் பெண்ணைப் போலே
பொங்கிடும் மக்கள் வாழ்வு
பொலிவுடன் தமிழைப் போலே.

— வ யோகானந்தசிவம்

## தமிழருக்கு என்ன செய்வாய்..?

ஆண்டாண்டு காலமாய் தமிழர்
அனுபவிக்கும் துயரமதை
பூண்டோடு அழித்து நீ
புதுயுகம் படைப்பாயா?
குண்டடித்து கொன்றழிக்கும்
கொடுமைத் தனங்களை நீ
கூண்டோடு அழித்து தமிழருக்கு
குதுகலத்தை தருவாயா?

— காரைநகர் எம் பி. அருளானந்தன்

## விடியலுங் காண்போம்!

மாரி பொழிந்தது நீரும் உயர்ந்தது
ஏரிகள் நிறைந்தன ஊரெலாம் வெள்ளம்
வீடுகள் வீதிகள் யாவும் மூழ்கின
நாடு எங்஑ணும் வெள்ளக் காடே
கழனிகள் தோறும் பயிரெலா மழிந்தன
உழவர் கலங்கினர், உள்ளம் உடைந்தது
இராணுவம் அழித்தது; இயற்கையுமழித்தது;
வீடுகள் இழந்தனம்; பொருள்கள் இழந்தனம்
நன்செய் நிலமெலாம் ஒருங்கேயிழந்தனம்,
ஆயினும் நாங்கள் கலங்கியாவிட்டோம்
வானத்து நீரெலாம் சோலைக்கு நன்முத்து
மானத்தைக் காக்க இறை தந்த பெருஞ்சொத்து
சோர்வற எழுவோம் மேழி பிடிப்போம
தரிசு நிலமெலாம் வியர்வையால் நனைப்போம்
அழிவினில் ஆக்கம் காணுவம், துணிவோம்
கதிரவன் காய்ந்தான் வானம் சொரிந்தது
மண்ணும் செழித்தது வருபயனுணர்வோம்
தைத் திரு நாளில் பொங்கலில மகிழ்வோம்
பொழுது புலர்ந்திடும் விடியலுங் காண்போம்

— ஆ. சவிரிப்பிள்ளை

# இ. தொ. கா. தீர்மானத்துக்கு இடைக்கால தடை உத்தரவு

## செல்லச்சாமி பெற்றார்

தமக்கு எதிராக இ. தொ. காவின் தேசிய சபை எடுத்த தீர்மானத்தை நிறைவேற்றுவதை தடை செய்து எம். எஸ். செல்லச்சாமி நீதிமன்றில் இடைக்கால தடை உத்தரவு ஒன்றைப் பெற்றிருப்பதாக கொழும்புச் செய்திகள் தெரிவித்தன.

இ. தொ. கா. பொதுச் செயலாளர் பதவியிலிருந்து செல்லச்சாமியை தற்காலிகமாக வெளியேற்றியும்—

பொதுச் செயலாளர் பதவியிலிருந்து செல்லச்சாமி தாமாகவே இராஜினாமாச் செய்ய இருவார கால அவகாசம் வழங்கியும்—

கடந்த 2 ஆம் திகதி இ. தொ. கா. தேசிய சபை தீர்மானம் நிறைவேற்றியது தெரிந்ததே.

இந்த தீர்மானத்துக்கு எதிராகவே திரு. செல்லச்சாமி இடைக்காலத் தடை உத்தரவைப் பெற்றிருக்கிறார்.

திரு. செல்லச்சாமி இந்த வழக்கை வாபஸ் பெறத்தவறினால் அதற்கு எதிராகத் தாம் சட்ட நடவடிக்கை எடுக்கப் போவதாக தொண்டமான் அறிவித்திருக்கிறார்.

# விமானத் தாக்குதல்களை விரிவுபடுத்த நடவடிக்கை

## புதிய தளபதி எடுப்பாராம்

கொழும்பு, ஜன. 14

விமானப்படையின் புதிய தளபதி ஒலிபர் ரணசிங்க விடுதலைப் புலிகளுக்கு எதிரான விமானத் தாக்குதல் நடவடிக்கைகளை விரிவுபடுத்த மேலும் நடவடிக்கைகள் எடுப்பார்.

பாதுகாப்பு பகுப்பாய்வாளர்களை மேற்கோள் காட்டி ''சண்டே ஐலண்ட்'' இத்தகவலை வெளியிட்டிருக்கிறது.

யாழ். குடநாட்டில் பாதுகாப்பு [illegible] கொள்ளும் எந்த பாரிய தாக்குதல் நடவடிக்கையிலும் விமானப்படையினர் தீர்க்கமான பங்காற்ற வேண்டியுள்ளது என்றும் –

அதற்குப் பலமான விமானப் படை ஒன்று தேவை என்றும் பாதுகாப்பு பகுப்பாய்வாளர்கள் தெரிவித்தனர்.

புதிய தளபதி பதவி ஏற்பதுடன், விமானப்படையின் கட்டளைப் பீடத்தில் முக்கிய மாற்றங்கள் மேற்கொள்ளப்பட விருப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (ஒ-எ)

இருக்கின்ற வன வளத்தை இனி அழிப்போமானால் இங்கு இனி எமக்கு இருப்பிடமேயில்லை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## புத்தாண்டில்... புத்தம் புது நிகழ்ச்சி

யாழ், ரமணனின்

ராஜன்ஸ் இசையில்

சாந்தன்

முதன் முறையாக இணைந்து பாட

ராஜன்ஸ் படைக்கும்

**இன்னிசை பொங்கல்**

S. G. சாந்தனுடன், ஜெயா சுகுமார், பார்வதி சிவபாதம், வர்ணராமேஸ்வரன், S. திவாகர், S. சத்தியசீலன், ஸ்ரனி சிவானந்தன், திருமலை சந்திரன், ஈழத்து மனோ நாவலன் ஆகியோரின் —

இசைச்சுவை

"சிற்றி போய்ஸ் டெய்லர்ஸ் ஆதரவில்"
தங்கவேல் செல்வராஜா குழுவினரின்

"[illegible] சிந்தியுங்கள்"

[illegible]

மாஸ்டர் [illegible] இசை
(ஆண்டு 3 [illegible] கல்லூரி மாணவன்)

இடம்: [illegible] மகளிர் கல்லூரி
காலம்: இன்று
நேரம்: 2-30 மாலை 7 மணி
டிக்கெட்: 100/ 50/-
கிடைக்குமிடம்:
மண் பவாயில்

★ நிகழ்ச்சி சிறக்க வாழ்த்துகிறோம் ★

தங்க நகைத் தெரிவென்றதுமே!
நாளுக்கு நாள் அதி உன்னத மோஸ்தர்களில் தரச்சிறப்புடன் அறிமுகம் செய்பவர்கள்.

**சிறி அமலா நகை மாளிகை**
74/1, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
(நவயுகத்தின் நகையகம்)

(28839)


## திருவள்ளுவர் புத்தாண்டு வாழ்த்து

All the wealth that toils give
Is meant to serve those who deserve
DIVINE THIRUKKURAL 22-2

இன்று முப்பெருமை வாய்ந்த திருநாள்

1. பொங்கல் திருநாள்
2. திருக்குறளுக்கு உலகப் பெருமை தேடித் தந்த டாக்டர் ஆல்பேர்ட் சுவைட்சரின் 119ஆவது பிறந்தநாள்
3. திருவள்ளுவர் புத்தாண்டு 2025 உதயம்

தெய்வீகத் திருக்குறள் மன்றத்தை ஆதரித்து அனைவருக்கும் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

எ. என். யோகநாதன்,
தலைவர்.

10. திருவள்ளுவர் சாலை,
யாழ்ப்பாணம்.

[28909]


## யாழ்ப்பாணக் கல்லூரி பட்டதாரிப் பிரிவு யாழ்ப்பாணம்

1. 1994 / 95 கல்வியாண்டு பேராதனை பல்கலைக்கழக G A Q ) கலைமுதற் தேர்வு விரிவுரைகள் ஆரம்பமாகிவிட்டன
[ஆங்கில இலக்கியம் உட்பட]
2) B A Part II பொது விரிவுரைகள் 22 01 94இல் ஆரம்பமாகவுள்ளன
[ஆங்கில இலக்கியம் உட்பட]
3) 1st in Science [பௌதீக விஞ்ஞானம்] [G.S.Q ] 1994 / 95 கல்வியாண்டு பேராதனைப் பல்கலைக்கழக [illegible] 03 - 01 - 94 இல் ஆரம்பமாகி நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன.
பாடங்கள்
1. தூயகணிதம் 2. பிரயோக கணிதம்
3 புள்ளிவிபரவியல் 4. பொருளியல்
5 இரசாயனவியல்
ஏதாவது 3 பாடங்கள் தெரிவு செய்யலாம்
4) 1st Science (G S Q Biology) உயிரியல் விஞ்ஞானம்
[[illegible] தாவரவியல், இரசாயனவியல்]
சேர விரும்பும் மாணவர்கள் 15-01-1994 இற்கு முன்னர் விண்ணப்பப் படிவங்களுடன் தங்கள் பெயர்களைப் பதிவு செய்யவும்.

**விரிவுரைகள் ஆரம்பம்: 22-01-94**

விபரங்களுக்கு:
[illegible] கல்லூரி
பட்டதாரிப் பிரிவு,
இல. 464, ஆஸ்பத்திரி வீதி
யாழ்ப்பாணம்

(சி 6963)


நவசமசமாஜக் கட்சி சார்பில்

# முதலமைச்சர் பதவிக்கு தேரரும் போட்டியிடுகிறார்

தென் மாகாணசபைத் தேர்தலில் நவசமசமாஜக் கட்சியின் சார்பில் முதலமைச்சர் பதவிக்கு வண. பத்தேகம சமித தேரர் நிறுத்தப்படவிருக்கிறார்.

நவசமசமாஜக்கட்சி இதனை உத்தியோகபூர்வமாக அறிவித்துள்ளது.

தென் மாகாணத்தில் உள்ள அம்பாந்தோட்டை, மாத்தறை மற்றும் காலி ஆகிய மாவட்டங்களில் நவசமசமாஜக் கட்சி போட்டியிடும்.

பத்தேகம சமித தேரர் காலி மாவட்ட வேட்பாளர் பட்டியலில் முதல் இடத்தைப் பெற்றுள்ளார். [ஒ-எ]

# சமரசம் ஏற்படாத நிலைக்கு தீய சக்திகளே காரணம்

## செல்லச்சாமி அறிக்கை

கொழும்பு, ஜன. 14

எனக்கும் திரு. தொண்டமானுக்கும் இடையில் தற்போது இருந்து வரும் தகராறில் சமரசம் உருவாக முடியாத சூழநிலை சில தீயசக்திகளினால் உருவாக்கப்பட்டு வருகிறது.

இ. தொ. கா. பொதுச் செயலாளரும் கைத்தொழில் ராஜாங்க அமைச்சருமான எம். எஸ். செல்லச்சாமி விடுத்துள்ள அறிக்கையில் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

தாஜ் சமுத்திரா ஹோட்டலில் தொண்டமானுடன் தாம் நடத்திய சந்திப்பு, உல்லாசப் பிரயாண, கிராமிய தொழிற்துறை அமைச்சில் நடந்த பத்திரிகையாளர் மாநாட்டில் தாம் கலந்து கொண்ட சூழ்நிலை ஆகியவற்றை அந்த அறிக்கையில் திரு. செல்லச்சாமி விளக்கி உள்ளார்.

அறிக்கையில் அவர் தெரிவித்துள்ளதாவது:-

இ. தொ. காவின் பொதுச் செயலாளர் பதவியில் இருந்து விலகுமாறும் அதற்கு 15 நாள் காலக்கெடு கொடுக்கப்பட்டிருப்பதாகவும் அட்டன் தேசிய சபைக் கூட்டத்தில் ஜனவரி 3 ஆம் திகதி நிறைவேற்றப்பட்ட தீர்மானம் இன்னமும் எனது கைக்குக் கிடைக்கவில்லை. பத்திரிகைகள் வாயிலாகவே அதனை அறிந்து கொண்டேன்.

ஆனால் கொழும்பில் உள்ள இ. தொ. கா. தலைமை அலுவலகத்தில் உள்ள எனது அலுவலக அறை உடைக்கப்பட்டு தஸ்தாவேஜுக்கள் வெளியே போடப்பட்டதாக கிடைத்த தகவல்களை ஊர்ஜிதம் செய்த பின்பே நான் நீதிமன்ற நடவடிக்கையை எடுத்தேன்.

ஜனவரி 2 இல் தேசிய சபைக் கூட்டத்தில் மேற்கொள்ளப்பட்ட முடிவுகள் மீது மேல் நடவடிக்கை எடுக்கக்கூடாது என்று நீதிமன்றம் இடைக்காலத்தடை உத்தரவு பிறப்பித்தது.

காங்கிரஸின் நலனிலும், இந்திய வம்சாவளி சமூகத்தின் நலனிலும் அக்கறை கொண்ட பிரமுகர்கள் எடுத்த முயற்சியால் ஜனவரி 4 ஆம் திகதி கொழும்பு தாஜ் சமுத்திரா ஹோட்டலில் நானும் தலைவர் தொண்டமானும் சந்தித்து ஒன்றரை மணித்தியாலங்கள் பேசினோம்.

அதேதினம் நானும் திரு. தொண்டமானும் இ. தொ. கா. தலைமை காரியாலயத்துக்கும் சென்றோம்.

அங்கு எம்மைச் சூழ்ந்து கொண்ட ஊழியர்கள் "நீங்கள் பிரியக்கூடாது" என்று கேட்டுக் கொண்டனர்.

அதன் பின்னர் நானும் தொண்டமானும் உல்லாசப் பிரயாண கிராமிய தொழிற்துறை அமைச்சுக்குச் சென்று கலந்து பேசினோம்.

மறுநாள் காலை 10.00 மணிக்கு சர்ச்சைக்குரிய மத்திய மாகாண சபை இ. தொ. கா. உறுப்பினர்கள் 8 பேரையும் கூட்டி வருவதாக தொண்டமானிடம் நான் கூறினேன். அவரும் அதற்குஇணங்கினார். அந்த மாகாண சபை உறுப்பினர்களில் 6 பேரை அமைச்சுக்குக் கூட்டிச் சென்றேன்.

அங்கு பத்திரிகையாளர் மாநாட்டுக்கு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது முன் கூட்டியே எனக்குத் தெரியாது.

என்றாலும் தொண்டமானின் மனம் புண்படக்கூடாது என்பதற்காக பத்திரிகையாளர் மாநாட்டில் நானும் கலந்து கொண்டேன்.

பத்திரிகையாளர் மாநாட்டின் பின்னர் சர்ச்சைக்குரிய 6 மாகாணசபை உறுப்பினர்களுடனும் தொண்டமான் பேசினார். மீண்டும் சந்திப்பதற்கு இணக்கம் ஏற்பட்டது.

இந்த 6 பேரில் இருவர் அமைச்சில் 'லிப்'டில் இறங்கி வரும்போது தொண்டமானின் பேரனின் மெய்ப்பாதுகாவலரினால் துப்பாக்கி முனையில் பயமுறுத்தப்பட்டனர் இது குறித்து அவர்கள் கொள்ளுப்பிட்டிப் பொலீஸில் முறைப்பாடு செய்தனர்.

நானும் தொண்டமானும் மீண்டும் சந்திக்க இருந்த போதிலும் தொண்டமான் தனது பேரனுடன் கொட்டகலைக்கு ஹெலிக்கொப்டரில் சென்று விட்டார்.

சமரச முயற்சி தொடரக்கூடாது என்ற நோக்கம் கொண்ட தீய சக்திகளே இவ்வாறு செய்துள்ளன.

இப்படி அறிக்கையில் தெரிவிக்கப்பட்டது. (இ)

வடமராட்சிக்---
(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

படையினர் நடத்தியகண்மூடித்தனமான தாக்குதலினால் சக்கோட்டை பழம் கோவிலடியைச் சேர்ந்த எஸ் பேனாட் (வயது 65) என்பவர் அதிர்ச்சியால் உயிரிழந்தார்.

பலாலியில் இருந்து இடம் பெயர்ந்து சக்கோட்டையில் வசித்து வரும் செ. அன்ரன் ஜெயக்குமார் (வயது 21), பயிலியதனையைச் சேர்ந்த ப. ஸ்ரீதரன் (வயது 18) ஆகிய இரு இளைஞர்கள் படுகாயமடைந்து மந்திகை அரசினர் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டனர்.

### ஆஸ்பத்திரி சேதம்

கடற்படையினரின் பீரங்கித் தாக்குதலுக்கு இலக்காகி வல்வை இந்திராணி வைத்தியசாலையும், பருத்தித்துறை ஆத்தியடியில் உள்ள அரச மருந்துச் சலையும் சேதமடைந்தன.

வல்லை இந்திரர்ணி வைத்தியசாலையின் வைத்திய பரிசோதனை அறை ஜன்னல் கண்ணாடிகள் சிதறின. கூரையும் சேதமடைந்தது.

[இ-5-15-109-173 87]


**O/L & YR. 10**
புதிய வகுப்புகள் ஆரம்பமாகியுள்ளன.
எமது வழமையான ஆசிரியர்கள்.
**SHAMROCK**
யாழ் சுண்டுக்குளி
(28935)


2 ஆயிரம்---
(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

சமயம் தரித்துள்ள 'கோமாரி' கப்பலில் இதனை ஏற்ற ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது என்றும் — தெரிவிக்கப்பட்டது.

இக்கப்பல் பெரும்பாலும் எதிர்வரும் 24 ஆம் திகதி வடக்கு நோக்கி புறப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.

அதேவேளை — கொழும்பில் பொருள்கள் ஏற்றிக் கொண்டிருக்கும் 'வ[illegible]துவ' கப்பல் நாளை 15 ஆம் திகதி வடக்கு நோக்கிப் புறப்படும் எனவும் அரச அதிபருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

(இ-3)

## காஞ்சி பெரியவர் நினைவு அஞ்சலி

யாழ்ப்பாணம், ஜன 14

சிவானந்த குருகுல பரிபாலனசபை நடத்தும் காஞ்சி மாமுனிவர் ஜகத்குரு அவர்களின் நூற்றாண்டு இறைபணி நிறைவுதின பிரார்த்தனை உரை நாளை சனிக்கிழமை காலை 8மணி முதல் நல்லூர் சிவன் கோவில் மண்டபத்தில் நடைபெற உள்ளது.

காலை 8 மணி முதல் 9 30 மணிவரை பூஜா, ஜபஹோம வழிபாடுகளும் பிற்பகல் 2.30 மணிக்கு வேதபாராயணம் திருமுறைபாராயணம், பிரார்த்தனை அஞ்சலியும், பிற்பகல் 3 மணிக்கு கவிதாஞ்சலியும் தொடர்ந்து தலைவர் உரை, பிரார்த்தஞ்சலி உரைகளும் இடம்பெறும்.

(இ-111-162)

★ ★ ★

ஜகத்குரு சங்கராச்சாரிய சுவாமிகள் சிவபதம் அடைந்த 7 ஆம் நாள் நினைவு அஞ்சலி சண்டிலிப்பாய் ஆலடிகுளாய் புளியடி ஸ்ரீ ஞானவைரவர் கோவில்இன்று வெள்ளிகிழமை காலை 10 மணிக்கு நடைபெறும். (க)


## திருமறைக் கலா மன்றம் வழங்கும் பொங்கல் விழா

சிறப்பு நிகழ்ச்சிகள்

14-01-1994 மாலை:- 6 30

○ கவியரங்கு பட்டிமன்றம் ○

○ நாடகம் ○

**சத்தியத்தின் தரிசனங்கள்**

இடம்:- மன்ற அரங்கு ஆசனப் பதிவு உண்டு

அன்பளிப்பு:-
கிறிஸ்ரியன் சிலுவைதாசன் J.P
(நகைகள்)

(C/6956)



## பரி. பேதுரு பாலர் பாடசாலை

நிம்மர் மண்டபம்
வேம்படி வீதி, யாழ்ப்பாணம்.

1989 ஆம் ஆண்டுக்குப் பின்னர் பிறந்த சிறுவர்கள் அனுமதிக்கப்படுவார்கள், விண்ணப்பப் படிவங்களை பரி. பேதுரு பாலர் பாடசாலை காரியாலயத்தில் பெற்றுக் கொள்ளலாம். இவர்களுக்கான விஷேட ஆங்கில வகுப்புக்களும் நடத்தப்படும்.

[சி/7031]


உ

## நன்றி உரித்தாகுக

தென் கோவை கற்பகப் பிள்ளையார் ஆலயத்தில் தமிழ் ஈழமக்கள் அமைதி பெறும் பொருட்டு 12-01-94 புதன்கிழமை அன்று எம்மால் நடத்தப்பட்ட திருவாசக முற்றோதல் வைபவத்தில் பங்கு பற்றி எம்மையெல்லாம் இறைவனுடன் இரண்டற கலக்க வைத்த சிவாச்சாரியப் பெருமக்கள், கோப்பாய் ஆசிரிய பயிற்சிக் கலாசாலை அதிபர், இந்து மாமன்ற ஆசிரிய மாணவர்கள் மற்றும் எமது அழைப்பை ஏற்று வருகை தந்த பெரியோர்கள் அனைவருக்கும் எமது உள்ளங்கனிந்த நன்றிகள்.

பா. செல்வசேனக்குருக்கள்
பிரதமகுருவும், பரிபாலகரும்

கற்பகப் பிள்ளையார் தேவஸ்தானம்,
இருபாலை, கோப்பாய். (28937)

## பத்தாவது ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம்:
07 – 01 – 1932

மறைவு:
15 – 01 – 1984



### அமரர் இளையதம்பி குமாரசுவாமி
(ஓய்வூதியத் திணைக்களம், யாழ். செயலகம்)

கண்ணை இமை காப்பதுபோல் காத்துநின்று
அன்புடனே அரவணைத்து
பாசமிக வழிநடத்தி விட்டகன்ற அருமைஅப்பா!
பத்தாண்டு கழிந்தாலும் என்றென்றும்
நிறைந்து நிற்கும்
நினைவலைகள் ஓயாது எம்துயரம் தீராது.

மனைவி, மக்கள்

"குமாராலய",
கைதடி. (28938)

## மரண அறிவித்தல்கள்

### சின்னத்தம்பி சண்முகரெட்ணம்

மாவிட்டபுரத்தை பிறப்பிடமாகவும், கொக்குவில் கிழக்கை வசிப்பிடமாக கொண்டவருமாகிய சின்னத்தம்பி சண்முகரெட்ணம் 13-1 94 அன்று காலமானார்.

அன்னார் தெய்வநாயகியின் அன்புக்கணவரும், காலஞ்சென்றவர்களான நந்தகுமாரன், சக்திபாலனின் அன்புத்தந்தையும் பஞ்சாமிர்தம், பஞ்சரத்தினம், குணரெட்ணம், நாகரெத்தினம் ஆகியோரின் சகோதரரும் ஆவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் கொக்குவில் மயானத்தில் இன்று (14-1-94) வெள்ளிக்கிழமை பிற்பகல் 2 மணியளவில் நடைபெறும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்;
ச தெய்வநாயகி
(மனைவி)

'சக்தி இல்லம்',
விதானை ஒழுங்கை,
கொக்குவில் கிழக்கு. (28939)

### நாகமுத்து சின்னத்துரை

சுன்னாகம் அஞ்சல் நிலையத்திற்கு அருகில் பிறந்தவரும், பருத்திக்கலடியில் வசித்தவரும், சுன்னாகம் அஞ்சல் நிலையத்தில் அநேக வருடமாகச் சேவையாற்றியவருமான நாகமுத்து சின்னத்துரை 13-1-93 அன்று சிவபதம் அடைந்துவிட்டார். அன்னார் சரஸ்வதியின் அன்புக் கணவரும், தவராசாவின் பாசம் மிக்க தந்தையும், தங்கரத்தினத்தின் அன்பு மாமனாரும், கோகுலன், இராகுலன், அகிலன், சோபிதா, தட்ஷாகினி முதலியோரின் பிரியமான பேரனுமாவார்.

அவரது இறுதிக் கிரியைகள் நேற்று (13-1-94) அன்னாரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் சுன்னாகம் கொத்தியாலடி இந்து மயானத்தில் தகனம் செய்யப்பட்டது. இத்தகவலை உற்றார் உறவினர் நண்பர்கள் அனைவரும் தயவாக ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்
சி. தவராசா
அஞ்சல் நிலையம்
சுன்னாகம்
(6772)

### ஆசைப்பிள்ளை சிவக்கொழுந்து

இணுவில் கிழக்கு சிவகாமி அம்மன் கோவிலடியைப் பிறப்பிடமாகக் கொண்ட ஆசைப்பிள்ளை சிவக்கொழுந்து காலமாகி விட்டார்.

அன்னார் காலஞ்சென்ற V.K சிவக்கொழுந்துவின் [உரிமையாளர் இணுவில் காலிங்கன் தியேட்டர்] அன்பு மனைவியும் ஆவார்.

இறுதிக்கிரியைகள் அன்னாரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் இன்று [14-01-1994] காலை 11 மணியளவில் தகனக்கிரியைக்காக காரைக்கால் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
த. குணநாயகம்
(மருமகன்)

சிவகாமி அம்மன் கோவிலடி,
இணுவில் கிழக்கு. (28941)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிடெட்டினால் யாழ்ப்பாணம் நாவலர் வீதி, 292/2 இலக்கத்திலுள்ள அச்சகத்தில் 14 - 01 - 1994 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.